விலை ரூபா 1-00 ★

ஈழநாடு
THE EELANADU

மலர் 24 மாசி 15 ஜ. அவ்வல் 2 இதழ் 15
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 27-2-82

பயிற்சி
வெல்டிங், வயறிங்,
மோட்டார் இயந்திரவியல்
செய்முறை அறிமுறையுடன் புதிய வகுப்புக்கள் 28-2-82 ஆரம்பம்.
சி. ஈ. ரி.
ஐலன்ட் இன்ஸ்ரிரியூட்,
58. ஸ்ரான்லி வீதி,
(விகாரைக்கு, சமீபமாக)
யாழ்ப்பாணம். (2406)

## தமிழ்நாடு பட்ஜட்

சென்னை பெப். 26
தமிழ் நாடு அரசின் 1982—1983ம் ஆண்டுக்கான பட்ஜட்டை நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் இன்று சட்டசபையில் தாக்கல் செய்தார்.

இந்த பட்ஜட்டில் 38 கோடி ரூபா கூடுதல் வருவாய்க்கு வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் இந்த பட்ஜட்டை எதிர்க்கட்சி தலைவர்கள் பலரும் கண்டித்துள்ளனர். (வெ)

# அமைச்சர் 'தேவா' விஜயம்:
# கூட்டணி கலந்து கொள்ளாது?

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்குழுக்கூட்டம் இன்று நல்லூர் எம். பி. யின் இல்லத்தில் நடைபெறும் பொழுது பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவிருக்கின்றன.

கிளிநொச்சியை தனிமாவட்டமாகப் பிரிப்பது சம்பந்தமாக உள் நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம்அடுத்தமாதம்4ம் திகதி கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

கிளிநொச்சி எம்.பி. திரு.வி. ஆனந்தசங்கரி யாழ்.மாவட்ட அபிவிருத்தி சபையில் கிளிநொச்சியிலிருந்து ஒரு அங்கத்தவராவது இடம் பெறாதது குறித்து வருத்தம் தெரிவித்திருந்ததுடன் கிளிநொச்சியை தனிமாவட்டமாகப் பிரித்து ஒரு அபிவிருத்தி சபை அமைக்கவேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டிருந்தது தெரிந்ததே.

கிளிநொச்சியை தனிமாவட்டமாகப் பிரிப்பதற்கான எல்லை நிர்ணயங்கள் குறித்து ஆலோசனை நடாத்துவதற்கு கிளிநொச்சித் தொகுதிக்கு அமைச்சர் தேவா விஜயம் செய்கிறார்

தமிழர் விடுதலை கூட்டணியைப் பொறுத்த வரையில் அமைச்சரை வரவேற்பதா? இல்லையா? என்று இன்று நடைபெறும் செயற்குழுக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

நிலைமை இவ்வாறு இருந்த போதிலும் அமைச்சரின் வர

(8-ம் பக்கம்பார்க்க)

'துரையப்பா விளையாட்டரங்கு'
## யாழ்.விளையாட்டரங்கானது!
### கூச்சல், குறுக்கீடுகள் மத்தியில் யாழ். மாநகரசபை தீர்மானம்

(ஏ. வி. மாணிக்கம்)

"துரையப்பாவிளையாட்டரங்கு" என்பதையாழ்ப்பாண விளையாட்டரங்கு" என்று பெயர் மாற்றம் செய்யவேண்டும் என்று கோரும் பிரேரணை யாழ். மாநகர சபையில் சமர்ப்பிக்கப் பட்டபோது சபையில் ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது!

ஒரு கட்டத்தில் அங்கத்தவா ஒருவர் இப்பிரேரணை சம்பந்தமாகப் பேசிக்கொண்டிருந்த அதே நேரம் பல அங்கத்தவர்கள் குறுக்கிட்டுப் பேசத் தொடங்கினர்.

இக்கூட்டத்தில் முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் பொறுமையாகவும் அமைதியாகவும் இருக்குமாறும் ஒழுங்கு முறையைக்கடைப் பிடிக்குமாறும் அங்கத்தவர்களைக் கேட்டுக்கொண்டார்.

ஆனாலும் அவரது வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்படாமல் தொடர்ந்தும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் அங்கத்தவர்கள் பேசிக்கொண்டிருந்த பொழுது, "நான் இதைவிட்டுவிட்டுப் போய்விடுவேன்" என்று

(8ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் சர்வதேச எண்ணெய்க் குதம் சபையில் மத்யூ தகவல்

(கொழும்பு)

"திருகோணமலையில் சர்வதேச எண்ணெய்க் குதம் ஒன்றை அமைப்பதற்கு பல வெளி நாடுகள் முன்வந்துள்ளன. இதுகுறித்து அரசாங்கம் தற்போது பரிசீலனைசெய்து வருகின்றது"

இவ்வாறு கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில்மத்தியூ நேற்று பாராளுமன்றத்தில் திருகோணமலையில் எண்ணெய்க்குதம் அமைப்பது தொடர்பாக அத்தனகல எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி கேட்ட கேள்வியொன்றிற்கு பதிலளிக்கையில் கூறினர்.

(8-ம் பக்கம்பார்க்க)

## Out Today

★ TULF M. P. heads towards show-down at Kilinochchi

★ Army men barge into Sivakumaran's mother's house

★ How serious is Sri Lanka's economic crisis?

★ Early Tamil Buddhist settlement in Vavuniya

**Saturday Review**

## பஸ்ஸினல் மோதுண்டு கடலில் வீசப்பட்டு இளைஞர் பலி!

—நமது நிருபர் நா. இராமச்சந்திரன்—

சைக்கிளில் மண்டைதீவு நோக்கி வந்து கொண்டிருந்த இரு வாலிபர்களில் ஒருவர் பஸ் வண்டியால் மோதுண்டு அருகிலுள்ள கடலுக்குள் விழுந்து மரணமானர்.

இப்பரிதாப சம்பவம்நேற்று முன்தினம் நிகழ்ந்தது.

மண்டைதீவு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்த மரியதாஸ், மதியாபரணம் ஆகிய இருவருள் ஒருவரான மதியாபரணம் மண்டைதீவு நோக்கி சென்று கொண்டிருந்த பஸ்வண்டியினல் மண்டைதீவு ஏழுகண் மதவடியில் வைத்து மோதுண்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

தனித்தனி சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது யாழ் நகரிலிருந்து மண்டைதீவு நோக்கி வந்த பஸ்வண்டி ஏழுகண் பாலத்தடியில் விலகிச் செல்லும் போது பஸ்ஸின் பின்பக்கத்தினல் மேற்படி வாலிபர் மோதப்பட்டதாகத் தெரியவருகிறது.

மரணமானவருடன் கூடச் சென்ற வாலிபர் மரியதாஸ் பொலிசாருக்கு கொடுத்த வாக்குமூலத்தில்; மண்டைதீவு சென்றுகொண்டிருந்த பஸ் வண்டியே இவரை மோதி விட்டு சென்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம்நடைபெற்ற இடத்துக்கு அண்மையில் இரண்டு வருடங்களுக்கு முன்னரும் மீன் பிடிக்கச்சென்ற

(8ம் பக்கம் பார்க்க)

### பொலிஸ் பாதுகாப்பில் பஸ் சாரதி

[பண்டத்தரிப்பு]

மண்டைதீவு ஏழுகண் மதவடியில் பஸ் விபத்தில் சிக்கி கடலுக்குள் விழுந்து மரணமான ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஊழியரான கந்தையா மதியாபரணத்தின் மரணம் பற்றி விசாரணை நடத்திய பதில் நீதவான் திரு. அமிர்தலிங்கம் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்த சார்ஜன்ட் திரு. அரியரத்தினம் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி பலத்த தேடுதலின் பின்னர் சடலத்தை தண்ணீருக்கு அடியில் கண்டுபிடித்தனர். இது தொடர்பாக இ. போ. ச. பஸ்சாரதி பொலிஸ் பாதுகாப்

(8ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

ஒரு சிறந்த கவிதையானது, தொட்டனைத்தூறும் மணற்கேணி போல, ஆராயுந்தோறும் அரிய பல நுண்பொருட் குறிப்புக்களை யுணர்த்தவல்லதாகத் திகழும்.

— பேராசிரியர் ஏ. சி. பிராட்லி.

# நமது நோக்கு

## உறைந்துவரும் இந்தோ-பாக். உறவு

'பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டாது' என்பது ஒரு பழைய வாசகம்.

''வருந்தி அழைத்தாலும் வாராது வாரா, பொருந்துவன போமினென்ருற் போகா'' என்பது மூதாட்டியின் முதுமொழி.

தனிமனிதன் விடயத்திலும், குடும்பதொடர்புகளிலும் இதை நாம் காண்பதுண்டு.

சமுதாயசாத்திரம் அரசியல் ஞானம் எவ்வளவுக்கு விருத்தியடைந்தபோதும், இந்த வாசகங்களின பேருண்மை நிலைத்து நிற்பது கண்கூடு. வரலாற்றைப் புரியாதவர்களுக்கு எதிர்காலம் இல்லை.

பாகிஸ்தான் உருவான போது, அது இந்திய உபகண்டத்தைக் கூறுபோட்ட அரசியல்கொலை, அதர்மச் செயல் என்று அதனைக் கண்டித்தவர் மகாத்மா காந்தி. அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாதவர் அந்த மகான்.

தவிர்க்கமுடியாத ஓப்பிரிவினை இந்தியா தனது சுதந்திரத்துக்கு சொடுக்க வேண்டிய குற்றப்பணம் என்று சமாதானம் சொல்லப்பட்டது.

இந்த 25 வருட காலத்தில் மூன்று யுத்தங்கள் இவ்விரு நாடுகளுக்கிடையே நடந்துமுடிந்தன; இரண்டு 'காஷ்மீர்' பற்றியது. ஒன்று பங்களாதேஷ் பிரச்னை உருவாக்கியது.

'காஷ்மீர்' தீராத உபத்திரவம் என்றே சொல்ல வேண்டும். காஷ்மீரின் மூன்றில் இருபகுதி இந்தியாவிலும்; மற்றையது பாகிஸ்தான் வைத்துக்கொண்டுள்ளது.

போர்க்கோலம் முற்ருக உருவெடுக்காத சூழ்நிலையில் இவ்விரு நாடுகளும் சமாதானமாக வாழ்வதே விவேகமான காரியமென்று இந்தியப் பிரதமர் இந்திரா பல தடவைகளிலும் பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்தினுர். தூக்கிலிடப்பட்டஜனுதிபதி பூட்டோவுடன் சிம்லாவில் ஒருதிடமான போர்தவிர்ப்பு நட்புறவு உடன்படிக்கை உருவாகும் சூழ்நிலையை இந்திரா ஏற்படுத்தியிருந்தார்.

ராணுவஆட்சி உருவானதும் ஜனுதிபதி ஸியாவுல் ஹக் அவற்றை எங்கே வீசினுரென்பது அவருக்கே தெரியாமலிருக்கும்.

பாகிஸ்தானில் இன்றும் நிலவுகின்ற ராணுவ ஆட்சியில் மக்கள் அதிருப்தி வர்ணிக்கமுடியாத நிலையில் அதிகரித்துவருகின்றது. இருப்பினும் ஜனுதிபதி ஸியாவுல் ஹக் தமது ராணுவ அதிகாரத்தாலும் அதனில் பிறந்த ஆளுமையாலும் மக்களை அடக்கிவைத்திருப்பது ஒரு அபூர்வமான செயலாகும்.

மக்களைத் திசைதிருப்ப அவர் கையாளும் உத்திகள் பொதுவாக எல்லாச் சர்வாதிகாரிகளும் கையாளும் முறையே! அமெரிக்காவிடம் மிக உயர்தரமான ராணுவ தளபாடங்களை வாங்கிக் குவிக்கும் பாகிஸ்தான் ஜனுதிபதி, இந்தியாவுடன் சமாதான சூழ்நிலையை வளர்க்க முயல்வது ஒரு தந்திரமே!

இதனை இந்தியப் பிரதமர் விளங்கும் வல்லமையற்றவரல்ல. மூன்று யுத்தங்களிலும் வெற்றிவாகைசூடிய இந்தியா பாகிஸ்தானின் கபடநாடகத்துக்கு எவ்விதத்திலும் பலியாகமாட்டாது.

கபடம் ஒருபுறம், அதனை முறியடிக்க நட்புறவு வல்லமைபெற்றது. இந்த அடிப்படையில் அண்மையில் பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சர் ஆஹா ஷாகி டெல்லிக்கு வந்து சில தினங்களாக நட்புறவுபற்றி அளவளாவிச் சென்ருர். பாகிஸ்தான் சென்றதும் யதவியை ராஜினுமாச்செய்தார்; என்ன மர்மம்! சுகயீனமே காரணம் என்று சோல்வது ராஜதந்திரம்!

அவ்வாறு இருந்தும், வருகிற கிழமை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஆர். டி. சாதி பாகிஸ்தானுக்குச் சென்று பேச்சுவார்த்தைகளைத் தொடரவும்,இவ்விரு நாடுகளுக்குமிடையே போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தவும் தயாராகவிருந்தார்.

அது எவ்வாறு நடந்தேறும்? கபடநாடகம் இடைநடுவில் குலைந்துவிடுமல்லவா? ஓநாயும் ஆட்டுக்குட்டியும் என்ற கதை போல, அமெரிக்க ஆயுதங்களைக் குவிப்பதும், இராணுவ நடமாட்டங்களை 'உஷார்' நிலையில் வைத்திருப்பதும், இவ்வித நட்புறவுக்கு உதவுமா?

பிரச்னைக்குரிய காஷ்மீர் பற்றி ஜெனிவாவில நடைபெற்ற மனித அடிப்படை உரிமை மாநாட்டில் பாகிஸ்தான் அவசியமின்றிப் பிரஸ்தாபித்துள்ளதாம்.

இதன் காரணமாக பாகிஸ்தானில் நடக்கவிருந்த பேச்சுவார்தை கால எல்லையின்றிப் பின்போடப்பட்டிருக்கிறது. இந்தியா இத்தீர்மானத்தை எடுத்திருக்கிறது.

தொட்டிலையும் ஆட்டி, பிள்ளையையும் கிள்ளிவிடும் அப்பியாசத்தில் பாகிஸ்தான் ஈடுபட்டிருக்கின்றது. நலிவுற்ற பாகிஸ்தானுக்கு ஏது திமிர்? அமெரிக்க ஆயுதங்கள் யாருக்கு எதிராக? இதனைப் புரிவது கடினமா?

# உலகமக்களின்சேமத்துக்காக ராமகிருஷ்ணர் பிறந்தார்!

-- சுவாமி சித்ரூபானத்தா --

அமெரிக்காவிலிருந்து வந்திருந்த அன்பர்கள் சுவாமி விமலானந்தரைக் கேட்டார்கள். ராமரும் கிருஷ்ணரும் இருக்க ஏன் தாங்கள் ராமகிருஷ்ணரை வழிபடுகிறீர்கள்? ''ஸ்ரீ ராம கிருஷ்ணர் மிகவும் அண்மையில் வாழ்ந்த மகா புருஷர். இவரின் ஆத்மீச அலைகளை எங்களுக்கு மிக அண்மையில் உள்ளன. ராமரும் கிருஷ்ணரும் ஐந்து அல்லது பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்புள்ளவர்கள்'' என்ருர்.

சுவாமி விவேகானந்தரும் இக்கூற்றை நிருபிப்பது போல் முன்பு ஒருநாள் ஸ்ரீ ராம கிருஷ்ணரின் ஆத்மீக பேரலைகளும் பேரன்பும் தகிணேஸ்வர ஆலமரத்தின் கீழ் உருவானவை. இவைகள் இவ்வுலகத்தில் ஆயிரம் ஆண்டுகள் தம் வலிமையை இழக்காமல் உலக மக்களை ஈர்த்து பெருவழிகாட்டும்'' என்ருர்.

ரொமையின் ரொலன்ட் என்னும் பிரெஞ்சு தத்துவ எழுத்தாளர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றிக் கூறுமிடத்து, இரண்டாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த முப்பது கோடிமக்களின் ஆத்மீக வாழ்வின் பரிபூரண உருவே இவர்'' என்ருர் அவதார புருஷர்களின் வரலாற்றில் இவரிடம் இரண்டு தனிச்சிறப்புகள் உண்டு. முதலாவதாக அவதார புருஷராகிய ஸ்ரீ ராமகிருஷ்ணரின் புகைப்படம் கைவசம் உள்ளது. இரண்டாவது அவர் கூற்றை அப்படியே அவரின் இல்லறச் சீடரான மகேந்திர நாதரால் உடனுக்குடன்எழுதப்பட்டது.

இவரின் புகைப்படம் சாதாரண படங்களைப் போன்றது அல்ல, ''ஸ்ரீராமகிருஷ்ணரின் புகைப்படம் இவரின் பக்தர்களுக்கு உயிரோடு உள்ளவாருக இருக்கின்றது.'' என்று ஸ்ரீ சாரதா தேவி குறிப்பிட்டுள்ளார். இப்படம் எடுக்கும் போது ஸ்ரீ ராமகிருஷ்ணர் பாவசமாதியில் இருந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் பல முன்னைய அவதாரங்களை தன்னுள் அடக்கியவர் என்பது அன்னை சாரதா தேவியின் கருத்தாகும் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் வரலாற்றை ஆழ்ந்து படிக்கும் பொழுது, இவர் பல சாதனைகள் புரியும் சமயம். ஸ்ரீ ராமர் சீதாதேவி, ஸ்ரீ கிருஷ்ணர். இராதாதேவி, கௌரங்கன், யேசுபெருமான், போன்ருேர் இவர் முன் தோன்றி இவரது உடலில் மறைந்ததாக காண்கிருேம். தகிணேசுவர காளி கோவில் நிர்வாகி மதுரநாதர் ஸ்ரீராமகிருஷ்ணர் உலாவிக் கொண்டிருக்கும் பொழுது, இவரதுஉடல் மறைந்துசிவனுகவும், காளியாகவும் காட்சி கொடுத்ததாக வரலாறு கூறுகிறது.

சுவாமிவிவேகானந்தர், ''ஸ்ரீ ராமகிருஷ்ணர் உலக மக்களின் நன்மைக்காகவும், சேமத்திற்காகவும் பிறந்தார். இவரை ஒருமனிதன், கடவுள், அவதார புருஷர் என்று உங்களுக்கு விரும்பியபடி அழையுங்கள். உங்கள் உங்கள் கருத்துக்குத் தக்கபடி ஏற்றுக்கொள்ளுங்கள் இவரின் முன்னுள் செல்லும் எவரும் துய்மையை அடைவது உறுதி. இவருடைய பெயரைப் பறைசாற்ற வேண்டியதில்லை. இவருடைய எளிமையான உபதேசங்களைப் படியுங்கள் மற்றவர்களுக்கும் சொல்லுங்கள் சாந்தியும் பேரின்பமும் அடைவீர்கள்'' என்ருர்.

இன்று உலகமக்கள் தவித்துக்கொண்டிருப்பதற்கு காரணம் என்ன? மனச்சாந்தியும் சமாதானமும் ஒரு இனத்திற்கோ அல்லது ஒரு நாட்டுக்கோகிடையாதது ஏன்? உலகமே இதை நாடி ஓடுகிறது! எண்ணெய் இல்லாமல் தீபம் எரியமாட்டாது. அதைப் போலவே இறைவன் துணையில்லாமல் மனிதன் வாழமுடியாது. கண்ணுககுக் காணப்படவில்லை எனபது கடவுள் இல்லை என்பதற்கு ஒருகாரணமாகுமா? இரவல் நட்சத்திரங்கள் திரள் திரளாக காணப்படுகின்றன பகலில் எல்லாப் மறைந்து போகின்றன கண்களைக்கொண்டு காணுத பொருட்களை இல்லவே இல்லை என்று சாதிக்க முடியுமா? நம்முடைய அறிவீன வாழ்க்கையில் கடவுளைக் காணவில்லை என்கிற காரணத்தால் கடவுளே இல்லை, கடவுளுக்கு அவசியமில்லை என்று சாதிக்க வேண்டாம், ஸ்ரீராமகிருஷ்ணருடைய அரிய உபதேசங்கள் நமக்கு சாந்தியையும், சமாதானத்தையும் நல்கும்.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண ஜன்மதினம் 25.2.82 வியாழக்கிழமை,

## மருந்துகள் விநியோகம்

[பண்டைத்தரிப்பு]

சுகாதாரப் பகுதியினர் பண்டத்தரிப்பு, சங்கானை, மானிப்பாய், அளவெட்டி ஆகிய இடங்களுக்குநேரடியாகவான் மூலம் மருந்துவகைகளை கொண்டுசென்று விநியோகம் செய்துள்ளனர். இதனையடுத்து மேற்படி வைத்தியசாலைகளில் நிலவிய மருந்துத்தட்டுப்பாடு பெருமளவில் நீங்கியுள்ளது.

# கொக்குவில் குமாரசாமிப்புலவர்

புராணபடனத்திலும், திருமுறைகளிலும் ஈடுபாடு உடையவன் என்ற முறையில் சில தினங்களுக்கு முன் சிவபதம் அடைந்த குமாரசுவாமிப்புலவர் அவர்களை நன்கறியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. புலவர் அவர்கள் பிறந்த கிராமமாகிய கொக்குவிலில் நெடுங்காலமாகப் புராணபடனம் அங்குள்ள கோயில்களில் ஒழுங்காக நடைபெற்றுவந்தது. இதில் புலவருடைய தந்தையாராகிய தம்பையாவும் பங்குபற்றிவந்தார். இச்சூழலில் வளர்ந்த புலவர் அவர்கள் புராணபடனத்தில் ஈடுபாடுற்றது நூதனமல்ல.

புலவர் தமது தமிழ்க் கல்வியை அவ்வூர் பரமானந்த உபாத்தியாரிடம் பெற்றுக்கொண்டார். பின்னர் மாதகல் ஏரம்பையரை அடைந்து அவரிடம் சமஸ்கிருதம் ஆகமங்கள் முதலியவற்றைக் கற்றுக்கொண்டார். மேலும் தமது கல்வியை விருத்திசெய்ய விரும்பி தமிழ்நாடு சென்று திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்து அங்கு மெய்கண்டசாஸ்திரங்கள், சிவபுராணங்கள், பண்ணிசை முதலியவற்றைத் திறம்படக் கற்றுக்கொண்டார். அதன்பின் ஆச்சாபுரம் சொக்கலிங்கதேசிகரிடம் பல புராணங்களை, விசேடமாகப் பெரியபுராணத்தைப பாடங்கேட்டார். புலவருக்குப் பெரியபுராணத்திற் சிறந்த ஆட்சி இருந்தது. இதற்கு காரணராயிருந்தவர் சொக்கலிங்கதேசிகரே.

### சைவப்பிரசாரகர்

இந்தியாவிலிருந்து திரும்பியதும் சேர். பொன். அருணுசலம் அவர்கள் முயற்சியால் தாபிக்கப்பட்ட கொழும்பு சைவபரிபாலனசபையில் சைவப்பிரசாரகராக இருந்தார்.

யாழ்ப்பாணத்தில் கதாப்பிரசங்கஞ் செய்வதில் வல்லுநராகச் சிலர் இருந்திருக்கின்றனர். இவர்களில் சங்கரசுப்பையர் (பின்னர் சச்சிதானந்த இராஜ யோகிகள்) நாகலிங்கபரதேசியார் முதலியவர்களை விசேடமாகக் குறிப்பிடவேண்டும்.

- ச. அம்பிகைபாகன் -

இவர்களைத் தொடர்ந்து புலவர் கதாப்பிரசங்கத்தைத் திறம்படச் செய்துவந்தார். இவருக்குப் பக்கவாத்தியமாகப் பரமேஸ்வரையர் வயலின் வாசித்துவந்தார்.

### ஆசிரியத் தொழில்

இப்படி இருந்துவருங் காலத்தில் பரமேஸ்வராக் கல்லூரியில் பண்ணிசையுஞ் சைவமும் கற்பிப்பதற்கு ஓர் அசிரியர் தேவைப்பட்டது. சோ. இராமனுதனுக்கு திருமுறைகளிலும் கர்நாடக சங்கீதத்திலும் அதிகம் ஈடுபாடிருந்தது. புலவர் அவர்களை நேர்முகப் பரீட்சை வைத்து பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராக நியமித்தார்.

இராமனுதன் கல்லூரியில் நெடுங்காலமாகச் சோமசுந்தர வாத்தியாயர் திருமுறைகளையும் புராணங்களையும் போதித்து வந்தார். அவருக்குப்பின் புலவர் அவர்கள் இராமனுதன் கல்லூரியில் ஆசிரியராக நியமிக்கப்பட்டு அங்கு நெடுங்காலம் கடமையாற்றினுர்.

### தமிழிசைச் சங்கத்தில்

தமிழிசைச் சங்கத்தின் ஆண்டுத்தமிழிசை விழாக்களில் பண்களைப்பற்றி ஆராய்ச்சி நடைபெறுவது வழக்கம். ஒருமுறை திரு. நடேசபிள்ளை அவர்களின் சிபார்சின்பேரில் சென்னை சென்று தமிழிசைச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற பண்ணுராய்ச்சி மாநாட்டிற் கலந்து அரிய கருத்துக்களை வெளியிட்டார்.

வண்ணுர்பண்ணை முதலியார் திருச்சிற்றம்பலம் அவர்கள் தேவாரங்களில் அதிகம் ஈடுபாடுடையவர். தமது மக்களுக்கு, சிறப்பாக இலங்கை வானெலியில் திருமுறைகளைச் சிறப்பாகப் பாடிவரும் மாணிக்கவாசகருக்கு, புலவரைக் கொண்டு பண்ணிசையைக் கற்பித்தார். பின்னர் சில தேவாரங்களைப் புலவரின் உதவியோடு பண்ணமைத்து வெளியிட்டார்.

### யோகசுவாமிகளின் தொடர்பு

யோகசுவாமிகளுக்கு புலவர்

(7ம் பக்கம் பார்க்க)

# 30 ஆயிரம் மக்களுக்கு சேவையாற்றும் ஆஸ்பத்திரியில் 30 வருடமாக அபிவிருத்தி இல்லை!

(பண்டத்தரிப்பு)

''இப்பிரதேசத்திலுள்ள 30 ஆயிரம் மக்களுக்கு வைத்திய சேவையாற்றவேண்டிய இந்த வைத்தியசாலை கடந்த 30 ஆண்டுகளாக எவ்வித அபிவிருத்தியும் அடையாத நிலையில் பல குறைபாடுகளுடன் இயங்கி வருவதுமிகவும்கவலைக்குரியதொன்ருகும். உடனடித் தேவைகளான டாக்டர்கள் தங்கியிருக்கும் விடுதியையும், தனியான பிரசவ வார்ட் ஒன்றையும் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு இச்சங்கம் முயற்சிக்கவேண்டும்.''

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பண பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மாதகல் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சி. நடராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ஜி. பத்மஜெயன் தலைமையில் வைத்தியசாலை வெளி நோயாளர் மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பண்டத்தரிப்பு, சில்லாலை, வடலியடைப்பு, மாதகல், இளவாலை ஆகிய பகுதிகளிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், மற்றும் பொதுநல சேவைச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ஜி. பத்மஜெயன் உரையாற்றுகையில் தமது பகுதியிலுள்ள வைத்தியசாலையின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் அக்கறைகொண்டு இதுபோன்ற சங்கம் அமைக்கப்படுவது வரவேற்கத்தக்கதென்றும், வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் பற்றியும் குறிப்பாக இரவு வேளையில் மின்சார பல்புகள் அடிக்கடி திருட்டுப்போவது பற்றியும் எடுத்துக் கூறினுர்.

பண்டத்தரிப்பு வர்த்தக சங்கத் தலைவர் திரு. மு. நடராசா உரையாற்றுகையில் இரவு வேளைகளில் டாக்டர்கள் வைத்தியசாலைக்குச் சமீபமாக தங்கியிருப்பது அவசியம் என்றும், புதிய விடுதி அமைக்கும்வரை வாடகை வீடு ஒன்றை இச்சங்கம்எடுத்து டாக்டர்களை அங்கு வசிக்கச் செய்யவேண்டும் என்ருர்.

அபிவிருத்திச் சங்க நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: சி. நடராசா, உபதலைவர்: மு. நடராசா, செயலாளர்: எஸ். செல்வரத்தினம், உபசெயலாளர்: என். எம். கந்தசாமி, பொருளாளர்: வி. நவரத்தினராசா, 8 பேர் செயற்குழு உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டனர். (க)

# 'இராசு' பற்றிய தெரிவுக் குழு அறிக்கை

(கொழும்பு)

பிரதேச அபிவிருத்திஅமைச்சர் திரு. செ. இராசதுரை பற்றிய தெரிவிக்குழுவின் அறிக்கை நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

தெரிவுக்குழுவின் தலைவரும் வர்த்தக கப்பல்துறை அமைச்சருமான திரு. லலித்அத்துலத்முதலி பாராளுமன்றத்தில் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து திரு. செ. இராசதுரை வெளியேற்றப்பட்டார் என்று கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் அறிவித்ததைத்தொடர்ந்து அவர் விலத்தப்பட்ட சூழ்நிலை, காரணம் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக தெரிவுக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

திரு. ஆர். சம்பந்தன், திரு. அனுரா பண்டாரநாயக்கா திரு. மெரில் காரியவாசம், திரு. டபிள்யூ ஜே. எம். லொக்குபண்டார ஆகியோர் தெரிவுக்குழுவின் ஏனைய அங்கத்தவர்களாவர்.

கூட்டணியிலிருந்து தாம் விலத்தப்படவில்லை என்றும் தாமே கூட்டணியிலிருந்து ராஜிஞமா செய்ததாகவும் திரு. செ. இராசதுரை முன்னர் தெரிவித்திருந்தார்.

# பிரதமர் இந்திரா பிரிட்டன் விஜயம்

புதுடில்லி, பெப். 26

இந்தியப் பிரதமந்திரி திருமதி இந்திராகாந்தி பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாகரட் தட்சரின் அழைப்பை ஏற்று அடுத்தமாதம் 21ம் திகதி பிரிட்டனுக்கு விஜயம்செய்யவுள்ளார்.

இவர் அங்கு 26ம் திகதிவரை தங்கியிருப்பதுடன் பிரதம மந்திரி திருமதி தட்சரையும் சந்தித்து உலகின் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளார். (வெ)

# யாழ். பொதுசன நூலகத்தை புனரமைப்பதற்கு மாணவர் அயராது உழைக்க வேண்டும்

(மாவிட்டபுரம்)

''தமிழ் மக்களின் அறிவின் மகுடமாக விளங்கிய இந்த நூலகத்தை மீள்விப்பதற்காக இன்றைய மாணவர்கள் அயராது உழைக்கவேண்டும். இன்றைய சந்ததிக்கு மட்டுமல்ல, பல சந்ததிகளுக்கு இந்நூல் நிலையம் வழிகாட்டியாக, அறிவுப் பொக்கிஷமாகத் திகழ வேண்டும். இந்த ஆசியாக் கண்டத்திற்கே அறிவு வழங்கும் சிறந்த சாதனமாக இது விளங்கியது. அந்த நிலையை மீண்டும் ஏற்படுத்த வேண்டும்.''

இவ்வாறு காங்கேசன்துறை கல்வி வட்டாரத்தில் யாழ். பொது நூலக நிதிசேகரிப்பு வாரத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. பொ. சோமசுந்தரம் கூறினுர்.

காங்கேசன்துறை கல்வி வட்டாரத்தில் 5 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நிதி சேகரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

காங்கேசன்துறை பட்டின சபைப் பகுதியில் நடேஸ்வரக் கல்லூரி அதிபர் திரு. இ. க. குலசேகரம் தலைமையிலும், தெல்லிப்பழை கிழக்குப் பகுதியில் யூனியன் கல்லூரி அதிபர் திரு. க. பாலசுந்தரம் தலைமையிலும், தெல்லிப்பழை மேற்கில் மகாஜன அதிபர் திரு. பொ. சோமசுந்தரம் தலைமையிலும், இளவாலை, மாதகல் பகுதியில் சென். ஹென்றீஸ் புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் வணபிதா இராசநாயகம்தலைமையிலும், அளவெட்டி மல்லாகம் பகுதியில் மல்லாகம் மகாவித்தியாலய அதிபர் திரு. அ. மகாதேவன் தலைமையிலும் இந்நிதி சேகரிப்பு நடந்தது.

மாணவர்கள் வீடுவீடாகச் சென்று கொடி விற்று நிதி சேகரித்தனர். அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் யாவரும் மிகுந்தஆர்வத்துடன் இதில் பங்குபற்றினர். [க]

குரும்பசிட்டி நகை கொள்ளை:

# சந்தேக நபர் இருவர் அடையாளம் காணப்பட்டனர்!

(மாவிட்டபுரம்)

குரும்பசிட்டியில் இடம் பெற்ற இரு கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் ஒரு சம்பவம் தொடர்பாக இருவர் அடையாளம் காணப்பட்டனர். மற்றையதில் எவரும் அடையாளம் காணப்படவில்லை.

குரும்பசிட்டியைச் சேர்ந்த வி. சொர்ணலிங்கம் என்பவரது வீட்டில் ஆயுத முனையில் இடம்பெற்ற 16 ஆயிரத்து 250 ரூபா பெறுமதியான நகைக்கொள்ளை தொடர்பாகவும், அதேயிடத்தைச் சேர்ந்த சிவசம்பு தம்பித்துரை என்பவரது வீட்டில் ஆயுத முனையில் இடம்பெற்ற 29 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான நகைக்கொள்ளை தொடர்பாகவும் யாழ். நீதிமன்றத்தில் மல்லாகம்பதில் நீதிபதி திரு. சே. குணரத்தினம் முன்னிலையில் இந்த அடையாள அணிவகுப்புகள் இடம்பெற்றன.

குரும்பசிட்டியைச் சேர்ந்த வே. இராசலிங்கம், வசாவிளானைச் சேர்ந்த செ. சார்ள்ஸ் மகேந்திரன், செ. புலேந்திரன், செ. இரகுராஜா, அ. தர்மராஜா, செ. இரவீந்திரராஜா ஆகிய சந்தேகநபர்களே அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்டவர்களாவர்.

முதலாவது கொள்ளை தொடர்பாக கொள்ளை இடம்பெற்ற வீட்டுக்காரர் வி. சொர்ணலிங்கம், அவரது மகள் லோகாம்பிகை ஆகியோர் அடையாளம் காண்பதில் ஈடுபட்டு 2ம், 5ம் சந்தேக நபர்களை அடையாளம் காட்டினர். மற்றவர்களை அடையாளம் காட்டவில்லை.

மற்றைய சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சாட்சிகள் இவர்களில் எவரையும் அடையாளம் காட்டவில்லை.

அடையாள அணிவகுப்பின் முன் முதலாவது நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம். ஸ்ரீதரன் ஆட்சேபனை தெரிவிக்கையில், இந்த நபர் கொள்ளை இடம்பெற்ற அதே இடத்தில் அயல் வீட்டில் வசிப்பவர் என்றும் ஆகவே நன்கு அறிமுகமான இவரை அடையாள அணிவகுப்பக்குட்படுத்துவதில் அர்த்தமில்லை என்ருர்.

4ம், 5ம், 6ம் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் ஆர். பி. சபாரத்தினம், கே. விஜயேந்திரா, எஸ். லிங்கராஜா ஆகியோர் ஆட்சேபம் தெரிவிக்கையில், இவர்கள் 5 நாட்களுக்கு மேலாக பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்ததாகவும், அதஞல் பலரும் பார்க்க.

(6ம் பக்கம் பார்க்க)

# அஞ ஓய்வுபெறுகிருர் ருத்ரா புதிய 'ஐ. ஜி. பி.'?

(கொழும்பு)

பொலிஸ் மா அதிபர் திரு. அஞ செனிவரத்ஞ ஏப்ரல் மாதம் 20ம் திகதி தமது சேவையிலிருந்து இளைப்பாறவிருக்கிருர்.

ஐம்பத்தைந்து வயதான பொலிஸ் மா அதிபர் திரு. செனிவரத்ஞ 1951ம் ஆண்டு பொலிஸ் சேவையில் உப பொலிஸ் அதிபராகச் சேர்ந்து பல உயர் பதவிகளை வகித்ததுடன் சர்வதேச ரீதியில் இடம்பெற்ற குற்றவியல் சம்பந்தப்பட்ட மகா நாடுகள் பலவற்றிலும் பங்குபற்றியுள்ளார்.

திரு. செனிவரத்ஞ சேவையிலிருந்தும் இளைப்பாறிய பின்னர் புதிய பொலிஸ் மா அதிபராக தற்போதைய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம் நியமிக்கப்படலாம் எனத்தெரிய வருகிறது. (கி)

இந்திய - பாகிஸ்தான்

# சாதகமான சூழ்நிலை பாதிக்கப்பட்டுள்ளது! - இந்திய வெளிநாட்டமைச்சர்

புதுடில்லி, பெப். 26

''ஜெனிவா மகாநாட்டில் பாகிஸ்தான், காஷ்மீர் பிரச்னையை எழுப்பியமை, கடந்த வாரம் நடைபெற்ற இந்திய—பாகிஸ்தானிய ஒற்றுமைபற்றி நடந்த பேச்சுவார்த்தையின் சாதகமான சூழ்நிலையை சிதைத்துவிட்டது''

மேற்கண்டவாறு இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. பி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார். (வெ)

# தொழில் நுட்பக் கல்விக்கு கூடுதல் நிதி ஒதுக்க முடிவு

(கொழும்பு)

தொழில் நுட்பக்கல்வியைச் சீரமைக்கும் வகையில் கணிசமான அளவு நிதி ஒதுக்கப்பட வேண்டுமென ஜனதிபதி சிபார்சு செய்ததை ஏற்றுக்கொண்டு 10 கோடியே 6 லட்சம் ரூபாவை மேற்படி கல்விக்குச் செலவிட அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

உயர்கல்விக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் 2·5சத வீதமான தொகையே தொழில்நுட்பக் கல்விக்கு இதுவரை செலவிடப்படுகிறதென்றும், இதஞல் தொழில் நுட்பக்கல்லூரிகள், பல்கலைக் கழகங்களைப் போன்று நன்கு அபிவிருத்தியடையாமல்இருக்கின்றனவென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பக் கல்விச் சேவையில் அதிக அக்கறை காட்டாததஞல் 1970ம் ஆண்டுக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட 21 பல்தொழில்நுட்பக் கல்லூரிகளும், கனிஷ்ட தொழில்நுட்ப நிறுவனங்களும், மிகவும் பின்தங்கிய நிலையிலும் இவற்றின் தளபாடங்கள், கருவிகள் என்பன சீரற்றும் காணப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஜனதிபதியின் சிபார்சையடுத்து தொழில் நுட்பக்கல்விச்சேவைக்கு ஒதுக்கப்படவிருக்கும் நிதியில் அடுத்த ஆண்டு 2 கோடியும், 84 ல் 3 கோடியும், 85ல் 5 கோடியும், 86ல் 1 கோடியும் செலவிடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. [கி)

# மழைபெய்யும் சாத்தியம்இல்லை

(கொழும்பு]

நாட்டில் விரைவில் மழைபெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் குறைவு என்று வளிமண்டல ஆராய்ச்சித் திணைக்களம் அறிவித்துள்ளது.(வெ]

# தென்கொரிய ஜனதிபதியை கொலை செய்ய முயற்சி!

சியோல், பெப் 26

தென்கொரிய ஜனதிபதியை படுகொலைசெய்ய முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் இருவர் டொறன்டோ நகரில் கைதுசெய்யப்பட்டார்கள்.

இவர்கள் இருவரும் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர். இதுதொடர்பாக மேலும் இருவரை கைதுசெய்வதற்கு நீதிமன்றம் பிடிவிருந்து பிறப்பித்துள்ளது.

தென்கொரிய ஜனதிபதியின் பிலிப்பைன்ஸ் விஜயத்தின்போதே அவரை படுகொலைசெய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (வெ)

### நம்பிக்கை மோசடி வழக்கு:

# எதிரிக்கு 9 மாத கடூழியமும், இரு வருட பொலிஸ் கண்காணிப்பும்!

(சாவகச்சேரி)

நம்பிக்கை மோசடி வழக்கில் எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டு 9 மாத கடூழிய சிறைத் தண்டனையுடன், 2 வருட பொலிஸ்கண்காணிப்பு செய்யுமாறும் தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் வரணியைச் சேர்ந்த சுந்தரம் அழகையா என்பவர் பாண்டிருப்பைச் சேர்ந்த மாரிமுத்து சின்னத்துரை என்பவருக்குச் சொந்தமான 8000 ரூபா பெறுமதியான பொருட்கள் அடங்கிய சூட்கேசை மோசடி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

வழக்காளியான மாரிமுத்து சின்னத்துரை யாழ்ப்பாணத்திற்கு வியாபார நோக்கமாக வந்து வரணியில் சுந்தரம் அழகையா என்பவருடைய வீட்டில் சம்பவதினம் 8000 ரூபா பெறுமதியான பொருட்கள் அடங்கிய சூட்கேசை வைத்துவிட்டு இரவு படுத்துறங்கி விடியஎழுப்பிப்பார்த்த பொழுது, சூட்கேசையும் எதிரி சுந்தரம் அழகையாவையும் காணுததினுல் பொலிசில் முறைப்பாடு செய்தார்.

இதன் தொடர்பாக பொலிசாக புலன்விசாரணையை மேற்கொண்டு யாழ்ப்பாணத்தில் பொருட்களை மீட்டதுடன் எதிரியையும் கைதுசெய்து, அவர் மீதுவழக்குதாக்கல்செய்தனர். (க)

## சகோதரி கண்டித்ததால் மனமுடைந்ததம்பிதற்கொலை

(மாவிட்டபுரம்)

மதுவுக்குஅடிமையாகிவிட்ட 22வயது வாலிபரை அவரது சகோதரி கண்டிக்கவே மனமுடைந்த அவர் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

கீரிமலை குடியேற்றத்திட்டத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுந்தரலிங்கம் என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டராவார்.

திடீர் மரணவிசாரனை அதிகாரி திரு. நா. தம்பிராசா மரணவிசாரணை நடத்திஞர்.

காலமானவரின் குடும்பத்தில் 5 பெண் பிள்ளைகளில் இவர் ஒருவரே ஆண் பிள்ளையாகவும் இருக்கும் நிலையில் இவர்கள் தாய் தந்தையரையும் முன்னரே இழந்துவிட்டனர் என்றும் காலமானவர் மதுவுக்கு அடிமையாகியிருந்தார். என்றும் வீட்டிலே பணம்திருடி மது அருந்துவார் என்றும் சம்பவதினம் அளவுக்கு மீறிய மதுபோதையில் வீட்டுக்கு வந்து படுத்திருந்த இவரை மூத்த சகோதரி கண்டித்ததாகவும் அதனையடுத்து மனமுடைந்த இவர் நஞ்சருந்தியதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

தற்கொலை என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். (க)

### 'சூட்கேஸ்' கொள்ளை வழக்கு:

# "1ம் எதிரியிடமிருந்த சூட்கேசைப் பறித்த என்னை 2ம் எதிரி அடித்தார்"

(சாவகச்சேரி)

''சம்பவதினம் எனது தாயார் ,இரத்தினபூபதி சாவகச்சேரி சந்தைக்கு சென்றுவிட்டார். நான் மாத்திரம் வீட்டில் தனியே இருந்தேன். எதிரிகள் 2 மணி வரையில் வீட்டுக்குவந்து அம்மா எங்கே? என்று கேட்டார்கள். நான் சாவகச்சேரி சந்தைக்கு போய் விட்டார் என்று கூறினேன், 1ம் எதிரி உடனே வீட்டிற்குள் புகுந்து சூட்கேசை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார். நான் சூட்கேசை பிடிக்க 2ம் எதிரி எனக்கு அடித்தார். நான் கையை விட்டேன் அவர்கள் உடனே சூட்கேசை கொண்டு ஓடிவிட்டார்கள்.

சரசாலை சூட்கேஸ் கொள்ளை வழக்கில் சாட்சியமளித்த 15 வயதான யோ. சற்குணதேவி மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச், காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

சரசாலையைச் சேர்ந்த யோ. இரத்தினபூபதிக்குச் சொந்தமான 3 சாறிகள் அடங்கிய சூட்கேசும் காசு 100 ரூபாவும் அவர்களுடைய வீட்டில் புகுந்து பட்டப்பகலில் திருடிச் சென்றதாக அவ்வூரைக் சேர்ந்த அரியநாயகம், பாலச்சந்திரன் என்பவர்களுக்கெதிராக இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

வாதிகள் சார்பில் சாஷன் வி. செல்லையா வழக்கை நெறிப்படுத்திஞர். எதிரிகள் சார்பில் சட்டத்திரணி சி. பொ. மயில்வாகனன் ஆஜராகிஞர்.

செல்வி யோ. சற்குணவதி தொடர்ந்து சாட்சியமனிக்கையில் கூறியதாவது: ''அம்மா 4 மணியளவில் சந்தையால் வந்தவுடன் நடந்த சம்பவத்தை அவருக்கு கூறினேன். பின் உடனே இருவரும் பொலிசுக்கு சென்று முறைப்பாடு செய்தோம்.

எதிரிகள் தரப்புச் சட்டத்தரணி சி. பொ. மயில்வாகனன் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: நீர் படித்துக் கொண்டிருக்கிறீரா?— நான் 1980 மார்கழியில் படிப்பை நிறுத்திவிட்டேன்.

சட்: எத்தனையாம் வகுப்பு படித்தீர்?— 7ம் வகுப்பு.

சட்: சம்பவதினம் வீட்டில் இருந்தது யார்?— நான் தனிய இருந்தேன்.

சட்: பொலிசுக்கு போனது யார்?— அம்மாவும் நானும்

சட் 2ம் எதிரி நிலாவரையில் வேலை செய்வது தெரியுமா?— அதைப்பற்றித் தெரியாது.

சட்: பொலிசுக்கு எத்தனை மணிக்கு போனீர்கள்?— நாலரைமணிவரையில்.

சட்: உமது வீட்டிலிருந்து பொலிஸ் நிலையம் எத்தனை மைல்?— சுமார் மூன்று மைல் இருக்கும்.

நீதிபதி: சம்பவதினம் நீர் சத்தமிடவில்லையா?—2ம் எதிரி அடித்த படியால் நோவில் மெல்ல அழுதுகொண்டிருந்தேன். சத்தமிடவில்லை.

நீதி: சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது?—மத்தியானம் 2 மணிபோல்.

நீதி: வீட்டைச் சுற்றிப் பக்கத்தில் வேறு வீடுகள் இருக்கிறதா?— ஆம், எதிரிகளின் உறவினர்கள்தான் எல்லாம். நாங்கள் அவர்களோடு கதைப்பது கிடையாது.

யோ. இரத்தினபூபதி சார்ஷன் துரைராசா என்பவர்கள் சாட்சியமளித்தபின் மார்ச் 17ம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (க)

## நூல் நிலைய திறப்புவிழா

[யாழ்ப்பாணம்]

கொடிகாமம் நூல் நிலைய கட்டட திறப்புவிழா நாளை சனிக்கிழமை மாலை, தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் திரு. க. துரைராசா தலைமையில் நடைபெறும்.

யாழ், அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு நடராசா பிரதம விருந்தின்ராக கலந்து கொள்வார். சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா ஆகியோர் சிறப்புரை வழங்குவார்கள். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். [க]

## கருத்தரங்கு

(பச்சிலைப்பள்ளி)

கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் ''கல்வியின் சமூகவியல்'' என்னும் விடயம்பற்றிய கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கு மார்ச் 1ம் தேதி மாலை கிருஷ்ண படிப்பகத்தில் நடைபெறும். இக்கருத்தரங்கிற்கான ஏற்பாட்டை கலாசாலை சமூகவியல் மன்றம் ஒழுங்கு செய்துள்ளது. இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை விரிவுரையாளர் திரு. மு. நித்தியானந்தன் உரையாற்றுவார். (க)

## ஆசிரியர் விபரம்

(வவுனியா)

வவுனியா கல்விப் பிரதேசத்தில் உள்ள பாடசாகளில் கடமையாற்றும் ஆசிரியர் குழாம் பற்றிய விபரத்தினையும், ஆசிரியர் வரவு பற்றிய ஆண்டறிக்கை ஒன்றினையும் கேட்டு இங்குள்ள பாடசாலை தலைவர்களுக்கு பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. சி. பொ. சிவபாதம் விபர படிவங்களை அனுப்பிவைத்துள்ளார்.

## விவசாய பண்ணையில் பாரதியார் விழா

(மண்டைதீவு)

திருநெல்வேலி அரசினர் விவசாய பண்ணை (கால்நடைப் பகுதி) உத்தியோகத்தர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை பண்ணை விவசாய பாடசாலை மண்டபத்தில் பாரதி நூற்ருண்டு விழாவை சிறப்பாக நடத்தவுள்ளனர்,

விழாவுக்கு பிரதம விருந்தினராக வடபகுதி உதவி பணிப்பாளர் திரு. சி. ஜெயரத்தினம் கலந்து கொள்கின்ருர் இவ்விழாவில் கருத்தரங்கு, கவியரங்கு, பட்டிமன்றம் ஆகியன இடம்பெறும்.

### தலைமன்ஞர் கப்பல் சேவை:

# பிரயாணிகள் அதிகரிப்பு; விசேட சேவை நடந்தது!

(மன்ஞர்)

தலைமன்ஞர் — இராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக இந்தியாவுக்குச் செல்வோரின் தொகை நாளுக்குநாள் அதிகரித்துள்ளதால்,கடந்த புதன்கிழமை தலைமன்ஞரிலிருந்து இராமேஸ்வரத்திற்கு விசேட கப்பல் சேவை ஒன்று நடத்தப்பட்டது.

கடந்த புதன்கிழமை மாலை இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்ஞர் துறையை வந்தடைந்த 'ராமானுஜம்' என்னும் கப்பல் மீண்டும் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு அன்று நள்ளிரவு இராமேஸ்வரத்தை நோக்கிப் புறப்பட்டது.

இதனையடுத்து மீண்டும் கடந்த வியாழக்கிழமை முதல் வழமையான கப்பல் சேவை நடைபெற்றுவருகிறது. (க)

### யாழ்ப்பாணக் கல்லூரியில்

# கைத்தொழில்,தொழில் நுட்ப விவசாய கண்காட்சி!

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் யாழ்ப்பாணக் கல்லூரியுடன் இணைந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடாத்தவிருக்கும் கைத்தொழில், தொழில்நுட்ப விவசாயக் கண்காட்சி அடுத்த மாதம் 15ம் திகதி ஆரம்பமாகி 20ம் திகதிவரை தொடர்ந்து ஆறுதினங்கள் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியை 15ம் திகதியன்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் சம்பிரதாய முறைப்படிதிறந்து வைப்பார்.

பிரபல வர்த்தக நிறுவனங்களும் கைத்தொழில்நிறுவனங்களும் இக்கண்காட்சியில் கலந்துகொண்டு காட்சிசாலைகளை நிறுவுவதற்கு விண்ணப்பித்திருப்பதாகவும், உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டு உற்பத்திசெய்யும் கைத்தொழில்நிலையங்களுக்கு இங்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் சட்டத்தரணி திரு. கே. குணரத்னம் தெரிவித்தார்.

இக்கண்காட்சியில் தினமும் சிறந்த தரமிக்க கலைநிகழ்ச்சிகளும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க)

## வள்ளமும் வலையும் தீக்கிரை

(மன்ஞர்)

பேசாலை - குருசுப்பாட்டில் சுமார் ஒரு லட்சம் பெறுமதியுடைய வள்ளம்ஒன்றும் வலைகளும் தீக்கிரையாகின.

பேசாலையைச் சேர்ந்த அந்தனிதீனு என்பவருக்குச் சொந்தமான வள்ளமும் வலைகளும் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தீயிடப்பட்டு சேதப்படுத்தப்பட்டதாம்.

இச்சம்பவம் பற்றி விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. (க)

# இளம்பெண் நஞ்சுக்குப் பலி; இளைஞர் நீதிமன்றில் சரண்:

(மாவிட்டபுரம்)

அயல்வீட்டு இளம்பெண் ஒருவரை நஞ்சூட்டிக் கொலை செய்தாரா? என சந்தேகிக்கப்பட்டு பொலிசாரால் .தேடப்பட்டுவந்த வாலிபர் ஒருவர் மல்லாகம் நீதிமன்றத்தில் சுரண் புகுந்ததையடுத்து றிமாண்டில் வைக்கப்பட்டார்.

அளவெட்டியைச் சேர்ந்த பாலசிங்கம் பரமேஸ்வரி என்னும் 23 வயது இளம்பெண் திடீர் மரணத்தை தழுவியதையடுத்து திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா மரணவிசாரணை நடத்திஞர்.

காலமானவருக்கும் அயல் வீட்டு வாலிபருக்குமிடையில் ரகசிய உறவு இருந்தது என்றும் இந்நிலையில் இவ்வாலிபருக்கு வேறுஇடத்தில் திருமணம் பேசப்பட்டது என்றும் தமது திருமணத்திற்கு இந்த இரகசிய உறவு தடையாக இருக்கும் என வாலிபர் கருதியிருக்கிறுர் என்றும் அதன் காரணமாக மேற்படி இளம்பெண்ணுக்கு நஞ்சூட்டிக் கொலைசெய்திருக்கிறுர் என்றும் மரணவிசாரணையில் தெரியவந்தத.

மரணவிசாரணை அதிகாரி பகிரங்கத்தீர்ப்பு வழங்கி இவ்வாலிபரை கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு சுன்ஞகம் பொலிசாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

பொலிசாரால் தேடப்பட்ட இந்நபர் சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு மூலம் மல்லாகம் நீதிமன்றத்தில் சரண் புகுந்தார்.

நீதிபதி திரு.சீ.வி.விக்னேஸ்வரன் அவரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார். (க)

## ஆலோசனைக் கூட்டம்

[சங்கானை]

சங்கானை கிழக்குப் பகுதியின் அபிவிருத்திபற்றி நாளை சங்கானைப் பிள்ளையார் ஆலய முன்றலில் வலி-மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில்வடிவேல் தலைமையில் ஆலோசனைக்கூட்டமொன்று நடைபெறவிருக்கிறது. இப்பகுதியிலுள்ள சங்கப்பிரதிநிதிகள், மாவட்ட சபை உறுப்பினர்கள், அரசாங்கப் பொதுநிருவாக உத்தியோகஸ்தர்களும் சிறப்பு அழைப்பினராக வட்டுக்கோட்டை எம். பி.திரு. தா, திருநாவுக்கரசுவும் பங்குபற்றுவர்.

## அங்கத்துவப் பங்கு அதிகரிப்பு

(பச்சிலைப்பள்ளி)

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்துவப் பங்கின் பெறுமதியை பத்து ரூபாவாக அதிகரித்தவர்கள் மட்டுமே, சங்கத் தேர்தலில் வாக்களிக்கவோ, அல்லது போட்டியிடவோ முடியும்.

இதுவரை காலமும் அங்கத்துவப் பங்கின் பெறுமதி ஒரு ரூபாவாகவே இருந்தது. அங்கத்தவர்கள் மீதிப் பணத்தினைச் செலுத்தி தமது அங்கத்துவத்தினை உறுதிப்படுத்துமாறு பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கேட்டுள்ளது.

# “தமிழ்ஈழப் பிரகடனத்தை லண்டனில்தான் வெளியிடுவோம் என்று நாம் கூறவில்லை!”

## கிருஷ்ணா வைகுந்தவாசன் விளக்கம்

லண்டன், பெப். 26

‘தமிழ் ஈழப் பிரகடனத்தை லண்டனில் தான் செய்யப்போகிறோம் என்று தமிழ் ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்த எவரும் ஒருபோதும் கூறியதில்லை. 1982 பொங்கல் தினத்தில் அதனைச் செய்வதுகுறித்துத் தான் பிரச்னை இருந்து வந்தது.’’

லண்டனிலுள்ள தமிழ் ஒருங்கிணைப்புக் குழுவின் அழைப்பாளர் திரு. கிருஷ்ணா வைகுந்தவாசன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நியூயோர்க்கில் நடைபெற்ற தமிழ் ஈழப் பிரகடனம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:

தமிழ் ஈழப் பிரகடனம் தொடர்பாக எழுந்த கொந்தளிப்பு தணிந்துகொண்டிருப்பதால் முழு விஷயத்தினதும் உண்மை நிலையை ஆராய்ந்து பார்ப்பது இப்பொழுது பொருத்தமாகும். இப்பொழுது பகிரங்கமாகியுள்ளது போல் தமிழ் ஈழப் பிரகடனம் அதற்குப் பொருத்தமான மேடையாகிய நியூயோர்க்கிலுள்ள ஐ. நா. தலைமைப் பணிமனையில் முறையாக நிறைவேற்றப்பட்டு விட்டது. 1979ம் ஆண்டு மாசசுசெட்ஸ் தீர்மானமும், பிரகடனமும் உருவாவதற்கு முன்னோடிகளானதேசபக்த தமிழர்களே இதையும் செய்தனர். இந்தப் பிரகடனத்தை வெற்றிகரமாகச் செய்துமுடிக்க முனைப்பாகவும், துணிச்சலோடும் செயல்பட்ட திரு. தில்லையம்பலம் சிறிகாந்தனுக்கு எமது ஆதரவு தொடர்ந்து இருந்துவரும்.

சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச்செல்ல எம்மால் முடியாதென்றால் சிறிகாந்தன்போன்ற தேசபக்தர்களாவது அதனைச்செய்ய ஆதரவு வழங்கவேண்டும். லண்டனில் இந்தப் பிரகடனத்தைச் செய்யாமல் தடுப்பதற்கு பலவிதமான தாக்குதல்கள் தமிழ் ஒருங்கிணைப்புக்குழு மீதும் அதன் அழைப்பாளர் மீதும் நடத்தப்பட்டன. லண்டனில் இந்தப் பிரகடனம் செய்யப்படும் என்று தமிழ் ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்த எவரும் ஒருபோதும் கூறியதில்லை. 1980 ஆகஸ்ட்டில் நாம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய காலத்திலிருந்து 1982 பொங்கல் தினத்தில் இதனைச் செய்வது தான் பிரச்னையாக இருந்து வந்துள்ளது. பொங்கல் தினத்தில் இப்பிரகடனத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியே செய்திருக்குமானால் நாம்மிகவும்குதூகலம் அடைந்திருப்போம். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி பயந்து விட்டது. அது மாத்திரமல்ல புதிதாக இரத்தக்களரி ஏற்படும் என்று மற்றவர்களையும் அச்சுறுத்தியது.

தமிழர் விடுதலைக் கூட்டணி இதனைச் செய்யாது என்று நாம் அறிந்து கொண்டதும் உலக மேடையாகிய ஐ. நா. விலேயே இதனைச் செய்வது என்ற முடிவுக்கு வந்தோம். பிரகடனத்தை நியூயோர்க்கில் தான் செய்யப்போகிறோம் லண்டனிலல்ல என்பதை முன்கூட்டியே அறிவித்திருந்தோமானால் அதனைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு அமைச்சர் ஜனாப் ஹமீதை அனுப்பி அமெரிக்க அதிகாரிகள் மூலம் முயற்சி செய்திருக்கும். ஏற்கனவே லண்டனில் இதனைச்செய்யாமல் தடுப்பதற்காக பிரிட்டிஷ் பிரதமரை சந்திக்க அமைச்சர் இரகசியமாக அங்கு விஜயம் செய்ததற்குப் பதிலாக நியூயோர்க் சென்றிருப்பார். அமெரிக்கத் தமிழர்களுக்கெதிராகவும் கூட்டணித் தலைமை பிரசாரம் நடத்தியிருக்கும். திரு. ஜெயவர்த்தனவின் யு. என். பி. அரசாங்கம் தொடர்ச்சியாகவே தமிழர்களின் விடுதலைக்கு எதிராகச் செயல்பட்டுவருவதை நாம் அறிவோம். ஆனால் திரு. அமிர்தலிங்கத்தின் நடவடிக்கைகள்—விசேஷமாக ஆறு மாத காலம் ஈழம் பற்றிப் பேசுவதில்லை என்று திரு. ஜெயவர்த்தனவுடன் பேச்சுக்கள் நடத்த ஆரம்பித்தபின்னர் அவரது போக்கு எம்மை சிந்திக்கவைக்கிறது.

விடுதலைப் பிரகடனத்தைச் செய்யத் தமிழ் ஒருங்கிணைப்புக்குழுவுக்கு யார் அதிகாரம் கொடுத்தது? என்று சிலர் கேட்டிருக்கிறார்கள். நாம் அவர்களைத் திருப்பிக் கேட்கின்றோம்: ஈழவிடுதலை பற்றி ஆறு மாதத்துக்குப் பேசுவதில்லையென்று திரு. ஜெயவர்த்தனவுடன் ஒப்பந்தம்செய்து கொள்ள த. வி. கூட்டணித் தலைமைக்கு யார் அதிகாரம் வழங்கியது? ஆறு மாதங்களின்பின் என்ன நடக்கும்? பொதுத்தேர்தலா? தமிழ் எம். பி.க்கள் புராதன சிங்கள ராஜ்யத்தின் கோட்டைக்குச் செல்வார்களா? என்று.

உண்மை என்னவென்றால் குறித்த நேரத்தில் செய்யப்படும் ஒரு காரியம் கேள்வி எழுப்புவர்களின் நலன்களுக்குப் பாதகமாக இருக்கும் போது தான் அதிகாரம் பற்றிய கேள்வியைக் கிளப்புகிறார்கள். நியூயோர்க்கில் ஐ. நா. பொதுச் சபையில் நான் (5.10.’8) இலங்கைத் தமிழரின் (பாஸ்கஸ் போன்ற நாடுகளின்) விடுதலை பற்றி முதல்முறையாக குரல் எழுப்பிய பொழுது உலகில் உள்ள எவரும் எனக்கு அதிகாரம் தரவில்லை. ஐ. நா. சபையில் நான் பேசப்போகிறேன் என்பதை என் மனைவிகூட அறிந்திருக்கவில்லை. த. வி. கூட்டணி தலைமையின் சிந்தனைப்போக்கிற்கு அது சாதகமாய் இருந்ததால் திரு அமிர்தலிங்கம் என்னைப் பாராட்டினார். சிவசிதம்பரம் லண்டனில் நடந்த கூட்டத்தில் பாராட்டிப் பேசினார்.

இந்தத் தலைவர்களுக்கு எதிராக தனிப்பட்டமுறையில் எனக்கு ஏதும் விரோதம் இல்லை.

நாம் தமிழ் ஈழத்துக்காகவே பாடுபடுறோம் என்று திரும்பத் திரும்பக்கூறுவதின்மூலம்தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது. யு. என். பி. வேட்பாளர்களைத் தோற்கடித்து தமிழ் மக்கள் கூட்டணி எம். பிக்களைத் தெரிவு செய்திருக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் செய்வதற்கெல்லாம் மக்கள் அதிகாரம் வழங்கியிருக்கிறார்கள் என்று அர்த்தமில்லை.

மா. அ. சபைத் தேர்தலில் த. வி. கூட்டணிக்கு மக்கள் வாக்களித்தார்கள். என்பது உண்மைதான் முக்கியமான அம்சம் என்னவென்றால் தமிழ் விரோத யு. என். பிக்கு எதிர்ப்பு இருப்பதுபோலவே தமிழ்விடுதலைக்காகப்போராடுவதாகக்கூறும் எந்த ஒரு வேட்பாளருக்கும் ஆதரவு இருக்கும் அவ்வாறுதான் சிங்கள யு. என். பி.க்கு எதிராக த. வி. கூட்டணி மக்கள் தீர்ப்பைப் பெறுகின்றது. எனவே தாம் நினைத்ததையெல்லாம் செய்வதற்கு தமிழ்மக்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள் என்று திரு. அமிர்தலிங்கம் கூறமுடியாது. 1977 பொதுத்தேர்தலில் விடுதலை, சுயகௌரவம், தமிழ்மக்களின் சுதந்திரம் ஆகியவற்றை வென்றெடுப்பதற்காக மக்கள் தீர்ப்பு வழங்கினார்கள். அப்போது அதன் பொருள், இறைமையுள்ள சுதந்திர சோஷலிஸ தமிழ் ஈழம் காணவேண்டும் என்பதையே குறிப்பதாகவிருந்தது.

இந்த நான்கரை ஆண்டுகளில் இந்த இலட்சியத்தை அடைய என்ன செய்திருக்கிறீர்கள்? ஏதாகிலும் உறுதியான நடவடிக்கை?

நாம் எதிர்பார்த்ததுபோல் பொங்கல் பிரகடனம் இலங்கையிலும், வெளியிலும் அதிக அரசியல் மேகத்தைக் கிளறிவிட்டிருக்கின்றது.

நியூயோர்க்கில் விடுதலை பிரகடனம் செய்திருப்பதானது 1977ம் ஆண்டு அவர்கள் வாக்களித்ததுபோல் தமிழ்ஈழ தேசிய (சட்ட) சபையைக் கூட்டவேண்டிய தடுமாற்ற நிலையைத் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

ஏறத்தாழ 400 ஆண்டு காலம் ஈழத்தமிழ் மக்கள் வெளிநாட்டவர்களின் கீழேயே இருந்துவருகிறார்கள். இப்பொழுது விடுதலைக்கான மகத்தான நடவடிக்கையொன்று பொங்கல்தினத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. எனவே இலங்கையிலும் வெளியிலும் இப்பொழுது உருவாகிவரும் நிலைமைகளின் வளர்ச்சியை அவதானித்து அடுத்த கட்டத்தை நோக்கி முன்னேறுவோம்.

## ரயிலில் திருட்டு ஒருவர் கைது

(மன்னார்)

தலைமன்னார் கொழும்பு இரவு ரயிலில் அடிக்கடி திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதால் பிரயாணிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

தலைமன்னாரிலிருந்து கடந்த புதன்கிழமை இரவு புறப்பட்ட ரயிலில் பிரயாணம்செய்த பிரயாணி ஒருவரின் சூட்கேசைத் திருடியது தொடர்பாகச் சந்தேகநபர் ஒருவர் ரயில்நிலைய அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டு மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (க)

## பொன்னாலையில் லட்சார்ச்சனை

(சுழிபுரம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான இலட்சார்ச்சனை நேற்றுத்தொடக்கம் ஆரம்பமாகி பத்துத்தினங்கள் தினமும் காலை 7 மணி முதல் பதினொருமணிவரையும் பகல் அர்ச்சனையும் இரவு ஆறு மணி தொடக்கம் இரவு 10 மணிவரை இரவு அர்ச்சனையும் நடைபெறும். திங்கட்கிழமை காலை சுவாமி திருவடி நிலைத் தீர்த்த ஸ்தலத்திற்குச் சென்று தீர்த்தம் வழங்குதல் நிகழ்ச்சியும் நடைபெறும். கடைசி மூன்று தினங்களும் மாலையில் தீபங்கள்ஏற்றுதலும் இடம்பெறும்.

## 1000 சுருட்டுகளுக்கு 85 ரூபா கூலி: 375 முதலாளிமார்கள் நோட்டீஸ் அடித்துள்ளனராம்

(யாழ்ப்பாணம்)

1000 சுருட்டுகளுக்கு 85ரூபா கூலி வழங்க இதுவரை 375 முதலாளிமார் நோட்டீஸ் அடித்துள்ளனர். இன்னும் 25 முதலாளிகள் மட்டுமே நோட்டீஸ் அடிக்கவில்லை. இவர்கள் நோட்டீஸ்அடிக்கும் வரை, தொடர்ந்து அங்கு வேலைநிறுத்தம் நடைபெறும்.

இலங்கை சுருட்டு தொழிலாளர் சங்க தலைவர் திரு. சி. க. முதலியார் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

85ரூபா கூலி கொடுக்குமாறு அகில இலங்கை சுருட்டு தொழிலாளர் சங்க தலைவர் திரு. ஆர். துரைராராஜசிங்கமும், இலங்கை சுருட்டு தொழிலாளர் சங்க தலைவர் திரு, சி. கே. முதலியாரும் இணைந்து கோரிக்கையொன்றை விடுத்தனர்.

கூலிஉயர்வு, கோரிக்கையை முன்வைத்து இம்மாதம் 10ம் தேதிமுதல். வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுவருவதாகவும், இதனால் 375 முதலாளிமார் நோட்டீஸ் அடித்துள்ளதாகவும், திரு, முதலியார் தெரிவித்தார்.

முதலாளிமார், தென்னிலங்கையில் 20 சதமாக விற்றுவந்த சுருட்டின்விலையை 25 சதமாக உயர்த்திவிட்டதால், இக்கூலி உயர்வை கொடுப்பதில் கஷ்டமிருக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

சகல முதலாளிகளும் 85 ரூபா வழங்குவதாக நோட்டீஸ் அடிக்கும்வரை, வேலை நிறுத்தம் தொடரும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

## திருமலையில் அமெ. எண்ணைக் கம்பனி பற்றி ஆராயப்படும்

[மாவிட்டபுரம்]

அளவெட்டி மகாஜன சபையின் மாதாந்தக் கூட்ட வரிசையில் இம்மாதம் 28ம் திகதி திருமலையில் அமெரிக்க எண்ணெய்கம்பனி உட்பட பல முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

பண்டிதர் க. நாகலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் ‘யல நாட்டுக் கம்பனிகளும், அவற்றால் ஏற்படும் ஆபத்துக்களும்’ என்னும் தலைப்பில் மானிப்பாய் எம்.பி. திரு.வி. தர்மலிங்கமும், ‘இந்து சமுத்திர அமைதியும், இலங்கைத்தீவும்’ என்ற தலைப்பில் சிவாசுப்பிரமணியமும் உரையாற்றுவர்.

அத்துடன் திருமலையில் அமெரிக்க் எண்ணெய்க் கம்பனி அமைய இருப்பதுபற்றியும் விசேடமாக ஆராயப்படவுள்ளது.

## புதிய உதவி அரச அதிபர்

(வண்ணார்பண்ணை)

தீவுப்பகுதி தெற்கு (வேலணை)உதவிஅரசாங்க அதிபராக திரு. ஏ. சி. நாகராசா இம்மாதம் 24ம் தேதி முதல் இடமாற்றம் பெற்றுள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் சமூகசேவைப் பகுதியிலும், பொதுசனத் தொடர்பு பகுதியிலும் அதிகாரியாக நீண்டகாலம் பணியாற்றிய இவர், கடந்த சில வருடங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வெளியில் உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றி வந்தார். (க)

## விசேடசேவை அதிகாரி

(நயினாதீவு)

நயினாதீவு வடக்கு, நயினாதீவு தெற்கு கிராம சேவகர்கள் பிரிவின் விசேட சேவை அதிகாரியாக திரு. ம. அம்பிகைபாகன் பதவியேற்றுள்ளார். (க)

## “சிங்களத்தேர்ச்சியின்மையால் பதவியிழந்த 27 விவசாய ஊழியருக்கு நிவாரணம் வழங்குக”

### அமைச்சர் இராசதுரைக்கு கோரிக்கை

(சாவகச்சேரி)

சிங்களமொழி தேர்ச்சியின்மையால் பதவிவிலக்கப்பட்ட 27 விவசாய விஸ்தரிப்பு சேவையாளர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையிடம்கோரப்பட்டுள்ளது.

வடமாகாண விவசாய விஸ்தரிப்பு சேவையாளர் சங்க பொதுச் செயலாளர் திரு. இராகாசிநாதன், அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் அவர்களுக்கு மீண்டும் பதவி வழங்குமாறு கோரியுள்ளார்.

அம்மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது.

பதவியிலிருந்து விலக்கப்பட்டோர் தொகை 27. இவர்களுக்குப் பதவி நீக்க அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டு 3வருடங்கள் சென்றுவிட்டன. இது விடயமாகச் சங்கம் நேரடிப் பேச்சுவார்த்தைகள் மூலமும், மகஜர்கள் மூலமும் அரசாங்கத்துடனும் இலாகாக்களுடனும் இரண்டு வருடங்களாகத் தொடர்பு கொண்டுள்ளது. மீண்டும் இதை வலியுறுத்தி திருப்திகரமான முடிவை அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். (க)

ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
Michael Caine Omarsharif
Ashanti
Adults—Action—Color

வெஸ்லி சுன்னாகம்
தினசரி: 2.30 6.15 9.15
1—3—82 வரை
ஆதிபராசக்தி

ஸ்ரீதர் யாழ். நகர்
கடைசி வாரம்
தினசரி 10:30, 2:30, 6:00, 9:30
சிவாஜி - ஜெயலலிதா
பட்டிக்காடா பட்டணமா
(புதிய பிரதி)

2-வது ஜனத்திரள் மாதம்
ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ்.நகர்) 10—30, 2—30, 4—45
7—00: 9—30
CHRISTOPHER LEE, PETER CUSHING
TELLY SAVALAS
Horror Express (Action, Suspense Thrill, Terror
Await: THE INCREDIBLE MELTING MAN

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
The Man Machine

லிடோ
(யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
பூந்தளிர்

மனோகரா (யாழ்ப்பாணம்)
10—30, 2—30, 6—30, 9—30
சிவாஜி— பத்மினி
தாயே உனக்காக

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-கே. ஆர். விஜயா-ரஜனிகாந்த்
ஜஸ்டிஸ் கோபிநாத்
1.3.82—2.3.82 THIEF OF BAGDAD
3.3.82—4.3.82 BLACK SUNDAY
5.3.82—7.3.82 MIGHTY HIMALAYAN MAN

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
செம்மீன் வெற்றிப் படத்தையடுத்து வெளிவரும் வெள்ளி விழா சித்திரம்.
பிரதாப் சுரேகா
தக்காரா
(கலர்—மலையாளம்) (இளமை—சுகம்)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

யாழ். றீகல்
தினசரி 10—30, 2—30, 6—30, 9—30 நான்குகாட்சிகள்
பெண்களின் ஏகோபித்த பாராட்டுகளுடன் காட்சியளிக்கிறது.
விஜயன் சுருளிராஜன் சத்தியகலா
தனிமரம்
டைரக்ஷன் துரை
இசை: சங்கர்—கணேஷ்

## தவக்கால நற்சிந்தனை



"தெய்வ பயமில்லாமல் அறிவினால் என்ன பிரயோசனம்" எந்த மனிதனும் எதையும் அறிவதற்கு இயல்பாகவே ஆசைப்படுகிறான். தன் ஆத்துமத்தைக் கவனிக்க மாட்டாமல் வானமண்டலத்தின் ஓட்டத்தைக் கவனிக்கிற அகங்காரியான சாஸ்திரியைவிட, சர்வேசுரனுக்கு ஊழியம்பண்ணுகிற தாழ்ச்சியுள்ள நாட்டுப்புறத்தான் சந்தேகமற உத்தமன். தன்னைத்தான் நன்றாயறிகிறவன் தன்னை நீசனாக மதிக்கின்றான். மனிதருடைய புகழ்ச்சியால் அவன் சந்தோஷமடைவதில்லை. உலகத்திலுண்டான யாவற்றையும் நான் அறிந்தும் தேவ சிநேகம் என்னிடத்தில் இல்லாமற்போனால் எனது நடத்தையைக் கொண்டு எனக்குத் தீர்வையிடும் சர்வேசுரனுக்கு முன்பாக எனக்கென்ன உதவி?

(கிறீஸ்த்துநாதர் அனுசாரம்)

## இசைக்கச்சேரி

கடந்த கிழமை திருநெல்வேலியிலுள்ள ஈவ்லின் இரத்தினம் இன்ரிரியூற்றில் சங்கீத வித்துவான் ஏ. கே. கருணாகரனுடைய இசைக்கச்சேரி நடைபெற்றது. இங்கு நடைபெற்ற இரண்டாவது கச்சேரி இதுவாகும்.

இவருடையகச்சேரி 'நின்னே பஜன' என்னும் நாட்டை இராக உருப்படியுடன் ஆரம்பமானது. ஆரம்பத்திலேயே கச்சேரி களைகட்டத்தொடங்கியது. இரண்டாவதாகப்பாடப்பட்ட 'கானரசம்' என்னும் வேகட இராகக்கிருதி கச்சேரிக்கு ரசனையூட்டியது. அடுத்ததாக இவர் எடுத்துக்கொண்ட 'சுப்ரமண்யேன' என்னும் சுத்தன்னியாசி இராகக்கிருதியை நன்றாக இராக ஆலாபனை செய்து பாடினார். நீண்டஆலாபனை செய்து பாடப்பட்ட இக்கிருதிக்கு ஸ்வரம் பாடாமல் விட்டமை ஒரு குறையாகத் தோன்றியது. லதாங்கி இராக ஆலாபனையும் அதில் பாடப்பட்ட கிருதியும் இக்கச்சேரிக்கு மகுடம் வைத்தாற்போல் அமைந்தது.

இவற்றையடுத்துப் பாடப்பட்ட மீராபஜன், இராசமாலிகா கிருதி, தில்லானா யாவும் சிறப்பாகவே அமைந்தன. பெரும்பாலும் தமிழ்ப்பாடல்களைப் பாடியமை குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில் கச்சேரியின் சிறப்புக்குக் காரணம் கற்பனா ஸ்வரம்பாடிய லாவகமும்ஸ்வரக்குறைப்பும் முத்தாய்ப்பாக வைத்தமகுடமுமேயாகும்.

மேற்படி நிகழ்ச்சிக்கு சங்கீத வித்துவான் திருமதி ஞானம்பிகை பத்மசிகாமணி வயலினும், சங்கீத வித்துவான் என், சோமஸ்கந்தசர்மா மிருதங்கமும், சங்கீத ரத்தினம் எம். சிதம்பரநாதன் கெஞ்சிராவும் வாசித்தனர்.

இயற்கையாகவே அனுசரயுடன் வயலின் வாசிக்கும் திருமதி ஞானம்பிகை பத்மசிகாமணியவர்கள் இன்றும் மிகவும் அனுசரணையுடன் வாசித்தார்கள்.

திரு. என். சோமாஸ்கந்தசர்மாவின் மிருதங்க வாசிப்பில் லயப்பிடிப்பும் இனிமையான நாதமும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மிருதங்கவித்துவானாகிய திரு. எம். சிதம்பரநாதன் இக கச்சேரியில் கெஞ்சிராவாசித்து கச்சேரியை மேலும் சிறப்படைய வைத்தார்.

முழுமையாக அன்றைய கச்சேரி செவிக்கு நல்ல விருந்தாக அமைந்தது.

காரை. செ. சுந்தரம்பிள்ளை

# கடன் தொல்லையால் நச்சுத் திராவகத்திற்குப் பலி

(சாவகச்சேரி)

நாவற்குளி தெற்கைச் சேர்ந்த கந்தையா இராசரத்தினம் என்பவர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார்,

நாவற்குளி மகாவித்தியாலயத்துக்குப் பின்புறமாக இறந்து கிடப்பதாகத் தகவல் கிடைத்ததும் சாவகச்சேரி பொலிஸ் நிலைய உதவிப் பொறுப்பதிகாரி விக்கிரமசிங்கா, முகதின் என்பவர்கள் உடனடியாக ஸ்தலத்திற்குச் சென்று சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றனர்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. என். தர்மேந்திரன் மரணவிசாரணையை நடத்தினார்.

காலஞ்சென்றவரின் தகப்பன் சின்னவன் கந்தையா, மனைவி இராசரத்தினம் பாக்கியம் என்பவர்கள் சாட்சியமளித்தனர். சாட்சியங்கள் மூலம் காலமானவருக்குக் கடன் இருந்ததாகவும் கடன்பழுவைத் தாங்கமுடியாது நச்சுத்திராவகம் அருந்தியிருக்கலாம் என்று தெரியவந்தது.

வைத்திய அதிகாரி திரு. கே. சண்முகநாதன் பிரேத பரிசோதனை நடத்தினார்.

மரணவிசாரணை அதிகாரி என். தர்மேந்திரன் சாட்சியங்களைப் பதிவுசெய்தபின்பு தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (க)

# பிரதமர் வருகை:

## எம். பிக்கள் மகிழ்ச்சி

(கொழும்பு)

வெளிநாட்டில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா நேற்று முன்தினம் பாராளுமன்றத்துக்கு வந்தபோது சபையின் இரு தரப்பு அங்கத்தவர்களும் மேசையில் தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

சபைக்குத் தலைமைவகித்த திரு. நோர்மன் வைத்தியரத்ன; பிரதமர் சபைக்கு மீண்டும் வந்திருப்பது மகிழ்ச்சி தருகிறது என்றார்.

'நீங்கள் சுகவீனமுற்றதாகக் கேள்விப்பட்டதும் ஆழ்ந்த கவலைகொண்டோம். தேகாரோக்கியத்துடன் இச்சபைக்கு வந்ததும் பெருமகிழ்ச்சியடைகின்றோம்'' என்றார்.

நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் சபையில் பேசுகையில், ''பிரதமர் சுகத்துடன் சபைக்கு வந்தது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது'' என்றார்.

அத்தனகலஎம்.பி.திரு.லக்ஷ்மன் ஜெயக்கொடி உட்பட அரச, எதிர்த்தரப்பு எம்.பி.க்கள் பலரும் பிரதமர் வந்தது குறித்து மகிழ்ச்சிதெரிவித்தனர்.

பிரதமர் ஆர். பிரேமதாசா நன்றி தெரிவித்தார். (ம)

# இன்றைய பலன்

மாசி மாதம் 15ம் திகதி
சனிக்கிழமை
(27—2—82)

மேடம்: வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும், எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும், சிநேகிதர் வழியால் உதவிகள் உண்டு, தெய்வத்தின் அருளும் கிடைக்கும்.

இடபம்: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர், குடும்பப் பிரச்சனைகளில் சுமுகமான நிலை தென்படும், சுற்றாடலில் வேண்டியதைச் சாதிக்கச்கூடிய செல்வாக்குப் பெருகும், இன்று பொன் நாள்.

மிதுனம்: எதிலும் அவசரக் கோலம் தென்படும், சகோதரவழியால் சஞ்சலத்துக்கு இடமுண்டு, எதிர்பார்த்த வரவுகள் தடைப்படக் கூடும், இளமை நினைவுகள் வேதனையைத் தரும், மனத்திடம் மருந்தாகும்.

கடகம்: தடைப்பட்ட காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும், தாய்வழிப் பெருமையுண்டு. வாகன நலனுடன் வாழ்விலும் சுகம் காணும்.

சிங்கம்: இதயத்தில் மகிழ்ச்சிவெள்ளம் பொங்கும், இனசனம் கூடுவர், புத்திர சுகத்துடன் தொழில்துறையில் வெற்றியும் கிடைக்கும்.

கன்னி: கருடப்பார்வை உங்களை வட்டமிடும், முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விசமிகள் திட்டம் போடுவார்கள், சிலருக்கு அன்னிய வாசமும் அகால போசனமும் உண்டு.

துலாம்: எண்ணிய கருமம் கண்ணியமாய் முடியும், களஸ்திரவழியால் பொருள் வரவும் உண்டு, பெரியோர்கள் மதிப்பு கிடைக்கும்.

விருச்சிகம்: முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை தோன்றும், கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள், சிலர் வழ்க்கையில் கடன்படவும் நேரிடலாம், நண்பர்களாலும் நஷ்டமடைவதற்கு இடமுண்டு.

தனு: தெய்வ நம்பிக்கை மேலோங்கி நிற்கும், சிலருக்கு ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம், பொதுப் பணிகளில் ஈடுபடுவதன்மூலம் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவர்.

மகரம்: தொழில்துறையில் முன்னேற்றம் தென்படும், மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் வணிகத்துறையில் புதியதொடர்புகள் ஏற்படும், சிலருக்கு நன்மையான இடமாற்றமுண்டு.

கும்பம்: மற்றவர்களின் இன்னல்கள் கண்டு இரக்கம் காட்டுவீர்கள், தாராள குணத்தின் மூலம் தனமும் செலவாகும், புண்ணிய யாத்திரை உண்டு.

மீனம்: துன்பத்தின் ரேகைகள் படரும், ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிக்கக்கூடும், கடன் தொல்லை அதிகரிக்கலாம், நிதானம் வேண்டும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## மூன்றாவது மாநாடு

(பச்சிலைப்பள்ளி)

அறவழிப் போராட்டக்குழுவின் மூன்றாவது மகாநாடும், நட்புறவு தினமும் நாளை கொண்டாடப்படவுள்ளது. இவ்விழா கைதடி சிறுவர் இல்லத்தில் நடைபெறும்.

## சந்தேக

(3ம் பக்கத் தொடர்ச்சி)

முடிந்திருக்குமென்றும் சாட்சிகளும் இவர்களைப் பார்த்திருக்கலாமெனவும் கூறினர்.

பதில் நீதிபதி இவற்றைப் பதிவு செய்தபின் அடையாள அணிவகுப்பை நடத்தினார்.

இதனையடுத்து மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்டபோது தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

(க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சண்டிலிப்பாய் — சங்கானை ரேட்டில் 7ம் கட்டையில் உள்ள ஐயனார் வீதியில் வீடு கட்டுவதற்கு ஏற்ற ஐந்து பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு 112, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 7200. (2393)

சுண்டிக்குளி மகளிர் பாடசாலைக்கண்மையில் 7 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2389, மே/பா ''ஈழநாடு'' யாழ்ப்பாணம். 2389

# அறிவித்தல்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

நம்பிக்கைச் சொத்துக்கள் சட்டத்தின் 42 (2) ம் பிரிவின் பிரமாணங்களுக்கு அமைய செய்யப்படும் விண்ணப்பம் ஒன்று சம்பந்தமாக

இல. ந. சொ/4599

1. சபாபதிப்பிள்ளை அருநந்தி சிவரத்தினம்
2. சபாபதிப்பிள்ளை இராமநாதன்

இருவரும் இணுவில்.

மனுதார்கள்

மேற்படி மனுதார்கள் இணுவிலில் உள்ள குரும்பசிட்டி என்னும் பெயரையுடைய காணியில் அமைக்கப்பட்டுள்ள விஸ்வேஸ்வரசாமி விசாலாட்சி அம்பாள் கோவிலின் தர்மகர்த்தாக்கள் என்ற முறையில் அவர்களால் குறித்த கோவிலுக்காக ஆட்சி செய்யப்பட்டு வரும்இதன் ஆதன இடாப்பில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை விற்பதற்கு அனுமதி கோரி விண்ணப்பம்செய்துள்ளபடியால்,

இவ்விண்ணப்பத்தின் மீது அக்கறையுள்ள யாராவது இருந்தால் 1982ம் ஆண்டு மார்ச் மாதம் 3ம் திகதி மு. ப. 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி இவ்விண்ணப்பத்தை ஏன் அனுமதிக்கலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் வேண்டப்படுகிறார்கள்.

1982ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ம் திகதி நீதிமன்றக்கட்டளைப்படி

சு. வ. கணேசன்
பதிவாளர்
25—2—82

### மேற்குறிப்பிட்ட ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவிற்பற்று இணுவில் இறை ''கட்டுப்புலானையும் நிம்பத்தையும்'' நி. பர. 2 இது 30—5—81ல் உத்தரவு பெற்ற உலாந்தா ரி. அருமைநாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட 1629ம் இலக்கப் படத்தில் 1ம் துண்டாகக் காட்டப்பட்டுள்ளது. இதுவும் கடைக்கட்டடங்களும், கிணறும், தென்னைகளும் மற்றும் அதைச்சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கும் வடக்கும் குறித்த படத்தில் 2ம் துண்டு மேற்கு யாழ்ப்பாணம் — காங்கேசன்துறை ரேட்டு தெற்கு மக்கியோய்ட் ஆஸ்பத்திரி இடங்களும் இதைச்சேர்ந்தவைகளும்.

சு. வ. கணேசன்
பதிவாளர்
25—2—82

வரைவு
மனுதாரின் சட்டத்தரணி
(இ. பாலசுப்பிரமணியம்)
2.96

## விற்பனைக்கு

பிறிபெக்ட் 100 E மொடல் E கடைசி இலக்க கார் விற்பனைக்குண்டு. திருத்தி அமைக்கப்பட்ட என்ஜின் நல்ல நிலையிலுண்டு. விபரங்களுக்கு க. பஞ்சலிங்கம் வேம்படி (கிழக்கு தெரு) வல்வெட்டித்துறை. 2375

மானிப்பாய் தபாற் கந்தோருக்கு எதிராக ஆஸ்பத்திரி, பஸ் நிலையம், கடைகளுக்கு அண்மையில் பிரதான வீதியில் பதினெட்டுப் பரப்பு காணி விற்பனைக்குண்டு. கமம் செய்ய உகந்தது. கட்டிடங்களும் கட்டலாம். தொடர்பு: 18, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். (2382)

நிதான விலையில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிறந்தரக கிரிக்கட் (Cricket) உதைபந்தாட்ட (Foot Ball) மற்றும் சிறந்தரக விளையாட்டு உபகரணங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளுங்கள்: 516 (பழைய இல: 278) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2321

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்திற்கு அண்மையில் ரேட்டு ஓரம் மூன்று பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. சண்முகலிங்கம், கிராமசபைக்கருகில் திருநெல்வேலி. 2402

வெளிநாட்டு மாபிள்மேசை, பலகார சோக்கேஸ் 6 x 4, கவுண்டர் பொயிலர் மற்றும் தளபாடச் சாமான்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 26, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம். 2398

கோண்டாவில் கே. கே. எஸ். வீதிக்கு அருகாமையில் வீடு கட்டுவதற்கு ஏற்ற காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு உடனடித் தொடர்பு கொள்ளவும். விக்னு டியூசன் சென்றர், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2399

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## தேவை

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் 2 அல்லது 3 படுக்கை அறைகளுடன் சகல வசதிகளைக் கொண்ட வீடு விலைக்குத் தேவை. தொடர்பு கொள்க: பிலிப் அலெக்சாண்டர், இல: 8, 1ம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8154 (2335)

கணக்காளராக தொழில் புரியும் I.C. M. A. Finalist க்கு பயிற்சி உதவியாளர் தேவைப்படுகிறது. கணக்கியலில் பயிற்சி கொடுக்கப்படும். கணக்கியல் பயிலும் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஞாயிறு 28ம் திகதி சான்றிதழ்களுடன் பி.ப, 1·30 மணிக்கிடையில் நேரில் வரவும். ச. ராஜகுமாரசுவாமி மே/பா அப்பையா, ஜி. ஜி. பொன்னம்பலம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 2403

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடிக்கு அருகாமையில் சகல வசதிகளுடனுன வீடு ஒத்திக்கும், வாடகைக்கும் உண்டு. தொடர்பு: சுபத்திரா தேவி, 870, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.. 2404

## தவறிவிட்டது

D. L. 518410 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் லைசென்ஸ் புத்தகம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். அ. வரதராஜா, 227, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2397

## வருடாந்த இரவு போசன வைபவம்

(அரியாலை)

யாழ். பரி.யோவான் கல்லூரியின் கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பு மாணவர் மன்றத்தின் வருடாந்த இராப்போசன வைபவம் இன்று பீற்றேர் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

மாணவர் மன்றத்தலைவர் டி. வி. சாமுவேல் தலைமையில் நடைபெறும் இவ்விருந்துவைபவத்தில் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் இந்திரபாலாவும், வைத்தியகலாநிதி நட்சனார்க்கினியரும் பிரதம அதிதிகளாகக் கலந்துகொள்ளவிருக்கின்றனர். (க)

## டிராக்டர் விற்பனைக்கு

37 ஸ்ரீ 2017 இன்ரேமோட்டோ டிராக்டர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு.

விபரங்களுக்கு:

**M. R. நித்தியானந்தன்**
பலாலி ரேட்,
உரும்பராய் தெற்கு. 2405

## ஸ்ரார் சனசமூக நிலையம்

கற்குள லேன், கொட்டடி,
யாழ்ப்பாணம்.

**9-வது ஆண்டு நிறைவு விழாவை**

முன்னிட்டு 03-03-82 அன்று நடைபெறும் அகில இலங்கை ரீதியிலான

- ஐம்பது மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி
- பத்து மைல் மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் 3ம் திகதிக்கு முன்னர் எமது நிலைய செயலாளரை நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.
- சைக்கிள் ஓட்டத்தில் முதல் பரிசு ஒரு துவிச்சக்கர வண்டி. 2407

'பண்பட்ட கவிதைகளால்

# கலாச்சார பாலத்தை பாரதி கட்டியெழுப்பினார்'

(சாவகச்சேரி)

''முன்னொரு காலத்தில் தமிழ்நாடும், இலங்கையும் இணைந்து ஒரேநாடாக விளங்கியது. பின்னர், தலைத்தமிழ்ச் சங்கத்தையும் இடையிலிருந்த தமிழர் நாட்டையும் கடல் கொண்டது. இவ்விரு நாட்டிற்கும் ''சிங்களத்தீவினுக்கோர் பாலம் அமைப்போம் சேதுவை மேடுருத்தி வீதி அமைப்போம்'' என்று பாரதியார்வீறுகொண்டெழுந்தார். பாலம் இன்றும் இல்லை. ஆனால் பாரதியாரின் பண்பட்ட கவிதைகளால் எமது திருநாட்டிற்கும் அழகான பாலத்தைக் கட்டிஎழுப்பிவிட்டார்''

தென்மராட்சி முத்தமிழ்க் கலைமன்ற ஆதரவில் நடந்த பாரதிவிழாவில் உரையாற்றிய ஆசிரியமணி ஆர். ரீ. சுப்பிரமணியம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கலவெட்டித்திடல் அம்மன் கோவிலுக்கு அருகில் கலைமன்றத் தலைவர் அ. பொ. செல்லையா தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் தொடர்ந்து திரு. சுப்பிரமணியம் குறிப்பிட்டதாவது:

''மடப்பள்ளிக்குள்ளும், அந்தப்புரத்திலும் மாத்திரம் சஞ்சரித்துவந்த தமிழ்ப் பெண்ணை கனவிலும் சரிநிகர் சமானம் என்றே ஒருவரும் சிந்தியாத வேளையில் பாரதியார் பெண் இனத்தின் விடுதலைக்காகக் குரல் எழுப்பினார். பாடினார் வீறுகொண்டெழுந்தார். சாதிப் பேயைச் சாடினார். வையமெல்லாமுய்ய வேண்டின் மகளிர் விதவை வாழ்வு விலகவேண்டும் என்றார். சக்தி உபாசகராய பாரதியார். புதுமைப் பெண்ணை அன்றே கண்டார். நாட்டின் அடிமைவாழ்வை மாத்திரம் அவர் சாடவில்லை. எத்தனையோ சமுதாய ஊழல்களை நெஞ்சுரத்துடன் சாடினார்''

தலைவர் அ. பொ. செல்லையா தமது ஆரம்பவுரையில் இப்பகுதி மக்கள் பாரதியாரின் அருமைபெருமைகளை நினைந்து இவ்விழாவைக் கொண்டாடுவது பாராட்டுக்குரியது என்றார்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

கொக்குவில் — கொக்குவில் கிழக்கு சம்பியன் லேன் 51ம் இலக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற இளையதம்பி இராஜரட்ணம் என்பவரின் மரண சாதனமில்லா மரணச் சொத்துக்களினதும் உடமைப் பொருட்களினதும் விடயத்தில்,

மரணமெய்தியவர்

வழக்கு இல: தத்துவம்/3564

சம்பியன் லேன் 51ம் இலக்கத்தைச் சேர்ந்த இராஜரட்ணம் ராஜரூபாகுமார்

மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும்1982ம் ஆண்டு பங்குனி மாதம் 12ம் திகதி அன்று முற்பகல்9.00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் முன்னர் தோன்றிஅவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1982ம் ஆண்டு மாசி மாதம் 16ந் திகதி.

இந் நீதிமன்றக் கட்டளைப்படி.

தா. குலஞானம்
பதிவாளர்

என்னால் வரையப்பட்டது.

சி. சிதம்பரநாதன்
மனுதாரின் சட்டத்தரணி
2395

## படிப்பக விழா

(மாவிட்டபுரம்)

மாதகல் விபுலானந்தர் படிப்பக 7 வது ஆண்டு நிறைவு விழாக்கொண்டாட்டங்கள் மார்ச் 5ம், 6ம், 7ம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

நிலையத் தலைவர் திரு. க. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இக்கொண்டாட்டங்களின் இறுதி நாளன்று பிரதம விருந்தினர்களாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் யாழ். அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. சு. நடராசா, யாழ். அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா ஆகியோர் கலந்து கொள்வர்.

இதையொட்டி கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், நடனம், நாடகம் ஆகிய துறைகளில் போட்டிகளையும் மேற்படி படிப்பகம் நடத்திவருகிறது. [க]

## கொக்குவில்

(2ம் பகுதத் தொடர்ச்சி)

பயன் சொல்வதைக் கேட்பதில் அதிக விருப்பம் இருந்தது. ஒரு மாதச் சிவராத்திரியின்போது சுவாமிகள் முன்னிலையில் பரமேஸ்வரையர் வாசிக்க சண்டேஸ்வரநாயனார் புராணம் முழுவதற்கும் புலவரே பயன் சொன்னார். புராண உரைகாரர் பலர் வந்திருந்தும், சுவாமிகள் புலவர் உரை சொல்வதைக் குழப்ப விரும்பவில்லை.

ஒருநாள் சுவாமிகள் வசித்து வந்த கொழும்புத்துறை ஆச்சிரமத்துக்கு அருகிலுள்ள பிள்ளையார் கோயிலில் புலவர் சம்பந்தரைப்பற்றிக் கதாப்பிரசங்கஞ்செய்தார். சம்பந்தரும் அப்பருஞ் சந்திக்கும் இடத்தை புலவர் பிரசங்கிக்கும்பொழுது ஒலிபெருக்கி மூலம் அதனைக் கேட்டுக்கொண்டிருந்த சுவாமிகள் தாம்கண்ணீர்விட்டுவிட்டதாகக் கூறினார். சுவாமிகள் புலவரைக்கொண்டு கந்தபுராணச் சுருக்கத்தை வசனமாக எழுதுவித்து ஓவசியர் தில்லையம்பலம் மூலம் வெளியிட்டார்.

புலவர் புராணத்துக்கு உரை சொல்வதைப் பல இடங்களிற் கேட்டுள்ளேன். ஆனால் ஒருமுறை நல்லூர் நாவலர் நிலையத்தில் நாவலர் குருபூசைத் தினத்தன்று கந்தப்புராணம் மார்க்கண்டேயப்படலத்துச் செய்யுட்கள் சிலவற்றுக்கு உரை சொன்னதை ஒருபொழுதும் மறக்கமுடியாது. அன்று வேதங்கள் ஆகமங்களில் இருந்து பல மேற்கோள்களை எடுத்துக்காட்டினார். மிருத்துஞ்சய மந்திரத்தை உரிய முறையில் உச்சாடனஞ்செய்தார். அன்று புலவர் உரை சொன்ன ஒருசெய்யுளை எடுத்துக்காட்டி இக்கட்டுரையை முடிப்போம் அச்செய்யுள் சிவபெருமான் இயமனுக்குப் புத்திமதி கூறியதாக அமைந்துள்ளது

நண்ணன்று கதிபெறு நமது
தொண்டரை
மண் உலகத்தவர் மனிதரே
என
எண்ணலை அவர்தமை யாம்
எனமறந்நினைதி
கண்ணுறுன் அன்னவர்
கழலின் வீழ்தியால்

# கடற்றொழிலாளி கத்திக்குத்துக்குப் பலி!

## சந்தேகநபர் சரண்

(புலோலி)

பருத்தித்துறை 4ம்குறுக்குத் தெருவைச் சேர்ந்த கடற்றொழிலாளரான யோன் எட்வேட் (35 வயது) கத்திக்குத்துக்குப் பலியானுர்.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேக நபரான இராஜேந்திரம் மரியதாஸ் (30 வயது) பொலிசில் சரணடைந்துள்ளார்.

இருவரும், கடற்றொழிலுக்குச் சென்றபோது, வலையில் தண்ணீர் பட்டதைத்தொடர்ந்து வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், பிற்பகல் இறந்தவர் சடற்கரைக்கு வலை பின்னச் சென்றபோது சம்பவம்நடந்ததாகவும் கூறப்படுகிறது.

இறந்தவர் கத்தியால் தாக்கப்பட்டதைத்தொடர்ந்து மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானுர். பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஏ. திருச்சிற்றம்பலம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி புலன் விசாரணையிலீடுபட்டுள்ளது.

பருத்தித்துறை நீதிபதி திரு. கே. எஸ். மகேசன் உத்தியோகப்பற்றற்ற நீதிபதி திரு. கே. கே. பாலசுப்பிரமணியத்தை, மரணவிசாரணை நடத்துமாறு பணித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிசார்மற்றும்இருசந்தேக நபர்களை தேடி வருகின்றனர் (க

## இப்படியும் நடக்கிறது

தமிழ்நாடு புதுவை மக்கள், பசுமைப் புரட்சி ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர்.

அவர்களின் 'புரட்சி'த் தலைவன் —திரைப்பட இயக்குநர் கே. பாலசந்தர்.

பாலசந்தரின் சர்ச்சைக்குரிய ''தண்ணீர் தண்ணீர்'' திரைப்படத்தைப் பார்த்ததும் புதுவை மக்களுக்கு ஒரு உந்து சக்தி ஏற்பட்டது.

அதன் விளைவு?

புதுவை நகரக் குடியேற்றத்திட்டவாசிகள், தங்களின் நீண்டகால அவசியத் தேவையைப் பூர்த்திசெய்ய எண்ணி, அவர்களாகவே குழாய்கள் அமைத்து, அவற்றை நிலத்தில் புதைத்து பிரதான குடிநீர் விநியோகத்திலிருந்து தண்ணீர் பெற்றுக்கொள்ள ஆரம்பித்துவிட்டனர். இதன் மூலம் இரண்டு வருடத் தண்ணீர்ப் பிரச்னை ஒரேநாளில் தீர்ந்தது!

விபரம் அறிந்த அரசு அதிகாரிகள் ஸ்தலத்திற்கு வந்தபோது அவர்களால் எத்தகைய தடுப்பு நடவடிக்கைகளையும் எடுக்கமுடியவில்லை.

''மக்கள் எல்லாவற்றுக்கும் அரசாங்கத்தை எதிர்பார்க்கக்கூடாது சுயதேவைகளை —குறைபாடுகளை தாங்களாகவே பூர்த்திசெய்ய முன்வரவேண்டும்.''

அரசின் ஓயாத ஒரு 'மந்திரத்தை' ''தண்ணீர் தண்ணீர்'' செயற்படுத்தியுள்ளது.

ஊடுருவி

## எண்ணெய் விலையை மெக்ஸிக்கோ குறைத்தது!

லண்டன், பெப், 26

மெக்சிக்கோ ஒரு பீப்பா எண்ணெய்யின் விலையை இரண்டரை டாலரால் குறைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. மசகு எண்ணெய்யின் விலையையும் ஒன்றரை டாலரால் மெக்சிக்கோ குறைத்துள்ளது.

உலகின் எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்துள்ளதை அடுத்து ஒபெக் நாடுகள் இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தவுள்ளன.

மெக்சிக்கோ ஒபெக் நிறுவனத்தில் அங்கத்துவம் வகிக்கவில்லை. [வெ]

## துரையப்பா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முதல்வர் எச்சரிக்கை விடுத்தார். இதனைத் தொடர்ந்து சபை சற்று அமைதியடைந்தது.

இப்பிரேரணையை வாக்கெடுப்புக்கு விடப்போகின்றேன்' என்று முதல்வர் அறிவித்ததும் பல அங்கத்தவர்கள் வரவேற்றனர்; சிலர் மறுத்தனர். நிலைமை இவ்வாறுஇருந்தும் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

மொத்தமாகவுள்ள 14 அங்கத்தவர்களில்8 பேர் தங்கள் கைகளை உயர்த்தி ஆதரித்து வாக்களித்தனர்.

மிகுதி 6 பேரும், துரையப்பா விளையாட்டரங்கை புனருத்தாரணம் செய்த பின்பு பெயரைமாற்றுங்கள்'' என்பதே தங்கள் வாதம் என்றும் இப்பிரேரணையை எதிர்க்காமல் தாங்கள் நடுநிலைமை வகிப்பதாகவும் தெரிவித்தனர்.

தீர்மாணம் நிறைவேற்றப்பட்டது என்று முதல்வர் அறிவித்ததைத் தொடர்ந்து சபை மேலும் அமைதி கண்டது.

திருவாளர்கள் எம். சுந்தரலிங்கம், தம்பு கந்தையா, இ. முத்தையா; ஆ. சோதிலிங்கம், ஜனுப் சாகுல்ஹமீட், திருமதி அந்தோனியா சுவாமிநாதர் ஆகியோரே நடுநிலைமை வகித்தவர்களாவர்.

திருவாளர்கள் ஆ. துரைராஜசிங்கம், எஸ்.தியரகராஜா ச. குமாரவேலு, எஸ். சண்முகராசா, ஜே. ஏ. செல்வநாயகம், என். ரி. செல்லத்துரை, ஏ. அலோசியஸ், எம். எஸ். பீரியல், ஆகியோர் ஆதரித்து வாக்களித்தனர்.

## பிரான்ஸ்ஜனதிபதி இஸ்ரேல் விஜயம்

பாரிஸ், பெப். 26

பிரான்ஸ் ஜனுதிபதி திரு. மிட்டரான்ட் அடுத்தமாதம் 3ம் திகதி இஸ்ரேலுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர் இருநாட்கள் அங்கு தங்கியிருந்து' இஸ்ரேலிய பிரதமர் திரு. மெனுச்சம் பெகினுடன் பலஸ்தீனியர்களின் பிரச்னை குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (வெ)

## நாச்சிமார் கோவிலடி கொள்ளை முயற்சியில் சம்பந்தப்பட்டவர் உரும்பராய் இளைஞரா?

(யாழ்ப்பாணம்)

பல கொள்ளைகள் சம்பந்தமாகத் தேடப்பட்டுவரும் உரும்பராயைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே, நேற்று முன்தினம் நாச்சிமார் கோவிலடியில் இடம்பெற்ற சிகரட் விற்பனையாளர் கொள்ளை முயற்சியில் சம்பந்தப்பட்டவர் என்று சாட்சியங்களிலிருந்து பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

ஆனந்தன் என்ற புனை பெயரில் நடமாடும் இவரையும், இவரது கோஷ்டியினரையும் பொலிசார் தீவிரமாக தேடிவருகின்றனர்.

நாச்சிமார் கோவிலடியில் கொள்ளையடிக்க முயற்சித்த இருவர் விட்டுச்சென்ற ஒரு சைக்கிளும், உரப்பை ஒன்றையும், றிவோல்வரையும் வைத்து பொலிசார் கைவிரலடையாளங்களைப் பரிசோதித்து வருகின்றனர்.

## அபிவிருத்தி சபை குழுக்கூட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின்குழுக்கூட்டமொன்று நாளை கூட்டணியின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது.

அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு.நடராசா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கிராமோதய சபைகள் அமைப்பது குறித்து ஆராயப்படலாமெனத் தெரிகிறது. (மா)

## இன்னும் 6 மாதத்தில் கொழும்பு - யாழ் நேரடித் தொலைபேசித் தொடர்பு

(கொழும்பு)

''கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே இவ்வாண்டு செப்டம்பர் மாதத்திற்கு முன் நேரடி தொலைபேசி தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்படும் இதற்கான உபகரணங்கள் பொருத்தப்பட்டு வருகிறது''.

மேற்கண்டவாறு தபால், தந்தி தொடர்புகள் அமைச்சர் திரு.டி.பி. விஜயதுங்க நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினுர்,

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் ''தொலைபேசி சேவையில் ஒழுங்கீனங்கள் காணப்பட்டால் அது தொடர்பாக கடும்நடவடிக்கை எடுக்கப்படும்'' என்ருர் (வெ)

## பனையிலிருந்து விழுந்தவர் மரணம்

(பண்டத்தரிப்பு)

பனையில் கள்ளுச் சீவ ஏறிய 60 வயது நபர் ஒருவர் தவறி விழுந்து மரணமான பரிதாபகர சம்பவம் உடுவிலில் நடைபெற்றுள்ளது.

உடுவில் புதுமடம் என்னுமிடத்தை சேர்ந்த கே. அரியகுட்டி என்பவரே இவ்வாறு இறந்தவராவர்'

இவரின் மரண விசாரணை யாழ். அரசினர் வைத்தியசாலையில் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் நடைபெற்றது.

காலஞ் சென்றவர் தேற்றுக் காலை கள்ளு இறக்குவதற்காக பனை ஒன்றில் ஏறியதாகவும் அங்கு கால் தவறி கீழே விழுந்து விட்டதாகவும், பலத்த காயங்களுக்குள்ளான அவரை உடனடியாக யாழ். அரசினர் வைத்தியசாலையில்அனுமதித்தபோது அவர் அங்கு இறந்துவிட்டததாகவும் சாட்சியங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டது. விசாரணை முடிவில் விபத்து மரணம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. சுன்னுகம் பொலிசைச் சேர்ந்த திரு. எஸ். எட்வேர்ட் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

## ஊர்வலங்களுக்கு தடை உத்தரவு!

சென்னை, பெப். 26

சென்னை நகரில் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றிற்கு 15 நாட்களுக்கு தமிழ்நாடுஅரசினுல் தடையுத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத் தொடர் இன்றுதொடங்கவிருப்பதையடுத்தே இத்தடையுத்தரவு விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார். (வெ)

## வீரபத்திர ஆலய திருவிழா

[வல்வெட்டித்துறை)

பொலிகண்டி வீரபத்திர ஆலய வருடாந்த உற்சவம் இன்று பிற்பகல் கொடி ஏற்றத்திருவிழாவுடன் ஆரம்பமாகி, தொடர்ந்து தீர்த்த உற்சவம் வரைக்கும் சிறப்பாக நடைபெறும். தீர்த்த உற்சவ தினமான அடுத்தமாதம் ஒன்பதாம் திகதி செவ்வாய்க்கிழமை சுவாமி ஊர்வலமாக வந்து தீர்த்தவிழா நடைபெறும்.

## பொலிஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பில் வைக்கப்பட்டார்.

இம்மரணம் பற்றி விசாரணை நடத்திய பதில் நீதிபதி திரு அமிர்தலிங்கம் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

## பஸ்ஸினுல்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

போது வயோதிபர் ஒருவர் சுழியில் அகப்பட்டு இறந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புஸ் சாரதியும் காப்பாளரும் பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் சம்பவம் நடைபெற்ற தினம் மண்டைதீவு பஸ்ஸில் கடமையில் ஈடுபட்டதாகவும் தனக்கோ, காப்பாளருக்கோ அல்லது பஸ் வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்த பிரயாணிகளுக்கோ மேற்படி விபத்துப் பற்றித் தெரியாது என்றும் தெரிவித்துள்ளனர்.

மரணமான வாலிபரின் சடலம் யாழ். அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

## ''கடற்றொழில் முக்கிய இடம்பெற்றுள்ளது''

(பண்டத்தரிப்பு)

''எமது பிரதேசத்தின் பொருளாதாரத் துறையில் கடற்றொழில் முக்கியமானதொரு இடத்தைப் பெற்றுள்ளது. பரந்த கடற்பரப்பையுடைய யாழ். குடாநாட்டில் கடற்றொழிலை மேலும் அபிவிருத்தி செய்து நவீன முறைபடுத்துவதன் மூலம் மீனவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேலும் உயர்த்த முடியும். இந்த நோக்கத்திற்காக யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க சேவா சங்கங்களின் சமாஜம் அயராது பாடுபட்டு வருவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்''.

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மாதகலில் நடைபெற்ற கடற்றொழிலாளர் அபிவிருத்தி சம்பந்தமான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

## அமைச்சர்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேற்பில் கூட்டணியினர் கலந்துகொள்ளக்கூடாதென்று தீர்மானிக்கப்படலாம் என்று நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. (மா)

## திருமலையில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றம் அடுத்த மாதம் 10ம் திகதி பிற்பகல மீண்டும் கூடவுள்ளது (வெ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காகயாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 603 ம இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி 7707, 889, 8126.